4.6.3 தனிநபர் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் பணியாளர்

நிகழ்ச்சித்திட்டம்	மொத்த மாணவர்கள்	மொத்த கல்விசார் மற்றும் கல்விசார் ஆதரவு பணியாளர்கள்	மொத்த கல்விசாரா பணியாளர்கள்
விஞ்ஞானத்தில் உயர் சான்றிதழ்	1024	87	37
வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தில் உயர் சான்றிதழ்	90		
விஞ்ஞானத்தில் தொடர் கல்வி	02		
ஆய்வுகூடத் தொழில்நுட்பத்தில் தகைமைச் சான்றிதழ்	11		
இயற்கை வளங்கள் மற்றும் உயிரியல் சுற்றுலாவியலில் தகைமைச் சான்றிதழ்	67		
விஞ்ஞானமாணி	3923		
கணிதத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்	02		
பௌதீகவியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்	07		
விலங்கியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்	03		
தாவரவியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்	01		
இரசாயனவியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்	01		
சுற்றாடல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி	141		
மருத்துவ ஒட்டுண்ணியியல் மற்றும் பிரயோகபூச்சியியலில் முதுமாணி	28		
முதுதத்துவமாணி/தத்துவவியல் கலாநிதி	18		

அட்டவணை 25: தனிநபர் நிகழ்ச்சித் திட்டங்களில் மாணவர் உள்ளீர்ப்பு மற்றும் பணியாளர்கள் - இயற்கை விஞ்ஞானங்கள்

4.6.4 புதிய கற்கைநெறிகள் / நிகழ்ச்சித்திட்டங்கள்

கற்கைநெறி / நிகழ்ச்சித்திட்டம்	மொழிமூலம்	மட்டம்
உணவு விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழ்	ஆ	2
ADE3200 – பிரயோக கல்லடைப்பு I	ஆ/சி/த	03
ADD3200 - உணவு விஞ்ஞானத்திற்கான அடிப்படைக் கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல்	ஆ	03
ADC2206 – ஆய்வுகூட தொழில்நுட்பத்திற்கான கணிதம்	ஆ	02

அட்டவணை 26: புதிய கற்கைநெறிகள்.:நிகழ்ச்சித்திட்டங்கள்– இயற்கை விஞ்ஞானங்கள்

4.6.5 நிகழ்நிலையாக வழங்கப்படும் கற்கை நெறிகள்

கற்கைநெறி	கற்கைநெறித் தலைப்பு	மட்டம்	மொழி மூலம்
	தாவரவியல் துறை		
BYU6302	உயிரியல் தொழில்நுட்பம்	6	ஆ
	இரசாயனவியல் துறை		
CYU4300	கனிம இரசாயனவியல்	4	ஆ
CYU5300	கரிம உலோக இரசாயனவியல்	5	ஆ
CYU5611	இரசாயனவியலில் ஆராய்ச்சி செயற்றிட்டம்	5	ஆ
LLU3261	சட்டத்தை விளங்கிக்கொள்ளல்	3	சி,த,ஆ
	விலங்கியல் துறை		
ZYU3500	விலங்கு வாழ்வு மற்றும் பல்வகைமை (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	3	ஆ
ZYU3301	உயிரியல் புவியியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	3	ஆ
ZYU4301	விலங்கு வடிவம் மற்றும் தொழிற்பாடு (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	4	ஆ
ZYU4301	சூழலியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	4	ஆ
ZYU4302	விலங்கு விருத்தி (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	4	ஆ
ZYU4303	விலங்கு நடத்தை (தெரிவுக் கற்கைநெறி)	4	ஆ
ZYU5300	நீர்வாழ் உயிரியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	5	ஆ
ZYU5302	உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	5	ஆ
ZYU5303	சுற்றுச்சூழல் நச்சியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	5	ஆ

கற்கைநெறி	கற்கைநெறித் தலைப்பு	மட்டம்	மொழி மூலம்
ZYU5304	ஒட்டுண்ணியியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	5	ஆ
ZYU5305	மானிட உயிரியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	5	ஆ
ZYU5306	பூச்சியியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	5	ஆ
ZYU5307	முளையூட்டி உயிரியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	5	ஆ
ZYU5308	விலங்கியல் செயற்றிட்டம் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	5	ஆ
ZYU5309	தொல்லுயிரியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	5	ஆ
ZYU53011	விலங்கியலில் இலக்கிய மீளாய்வு	5	ஆ
ZYU5313	ஆராய்ச்சி முறையியல் மற்றும் தொடர்பாடல் திறன்கள் (டீடநனெநன ழடெனெநெ)	5	ஆ
ZYU6303	மூலக்கூற்று உயிரியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	6	ஆ
ZYU6306	உயர் பறவையியல் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	6	ஆ
ZYU6908	விலங்கியலில் ஆராய்ச்சி செயற்றிட்டம் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	6	ஆ
ZYU6310	வனவாழ்வு முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	6	ஆ
ZYU6311	விலங்கியலில் விசேட தலைப்புக்கள் (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	6	ஆ
ZYP8301	மருத்துவம் மற்றும் கால்நடை முக்கியத்துவம் வாய்ந்த கால்நடையியல் (Blended Online)	8	ஆ
ZYP8603	மானுட ஒட்டுண்ணிகள் (Blended Online)	8	ஆ
ZYP8603	நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு உயிரியலுக்கான அறிமுகம் (Blended Online)	9	ஆ
ZYP9304	ஒப்புயிரி ஒட்டுண்ணி தொடர்பு (Blended online)	9	ஆ
ZYP9605	தொற்றுநோயியல் மற்றும் காற்றின் மூலம் பரவும் நோய்களின் கட்டுப்பாடு (நிகழ்நிலை தெரிவுக் கற்கைநெறி)	9	ஆ
	கணிதத் துறை		
ADU3300	திசையன் இயற் கணிதம்	3	சி,த,ஆ
ADU3201/ADU3218	அடிப்படைப் புள்ளிவிபரவியல்	3	சி,த,ஆ
ADU3302	வேறுபட்ட சமன்பாடுகள்	3	சி,த,ஆ
PEU3300	கணிதவியல் தர்க்கவியல் மற்றும் கணித நிரூபனங்கள்	3	சி,த,ஆ
PEU3301	கணிதத்தின் அடிப்படைகள்	3	சி,த,ஆ
PEU3202	நேரியல் வெற்றிடங்கள்	3	சி,த,ஆ
ADU4300	புள்ளிவிபரவியல் விநியோகக் கோட்பாடு	4	ஆ
ADU4301	நியூட்டனியல் விசையியல் I	4	ஆ
ADU4302	திசையன் தொகையீடு	4	ஆ
ADU4303	பிரயோக நேரியல் இயற்கணிதம் மற்றும் வேறுபட்ட சமன்பாடுகள்	4	ஆ
PEU4300	உண்மை பகுப்பாய்வு I	4	ஆ
PEU4301	உண்மை பகுப்பாய்வு II	4	ஆ
PEU4302	நேரியல் இயற்கணிதம்	4	ஆ
PEU4303	குழு கோட்பாடு I	4	ஆ
PEU4315	தொடர்ச்சியான தொழிற்பாடுகள்	4	ஆ
PEU4316	வேறுபட்ட தொழிற்பாடுகள்	4	ஆ
ADU5318	உயிரியல் புள்ளிவிபரவியல்	5	ஆ
ADU5319	பரிசோதனைகளின் வடிவமைப்பு மற்றும் பகுப்பாய்வு	5	ஆ
ADU5320	ஆயுவுடுயுடீ மென்பொருளுக்கான அறிமுகம்	5	ஆ
ADU5300	நேரியல் நிகழ்ச்சித்திட்டம்	5	ஆ
ADU5301	தொடர்புப்போக்கு பகுப்பாய்வு ஐ	5	ஆ
ADU5302	கணிதவியல் முறைகள்	5	ஆ
ADU5305	புள்ளிவிபரவியல் அனுமானம்	5	ஆ
ADU5307	எண்ணியல் முறைகள்	5	ஆ
ADU5308	வரைபடக்கோட்பாடு	5	ஆ
ADU5615	கணிதத்தில் செயற்றிட்டம்	5	ஆ
PEU5300	ரீமன் தொகையீடு	5	ஆ
PEU5301	வளைய கோட்பாடு	5	ஆ
PEU5302	சேர்மானவியல்	5	ஆ
PEU5303	எண் கோட்பாடு	5	ஆ
PEU5304	சிக்கலான பகுப்பாய்வுக்கான அறிமுகம்	5	ஆ
PEU6304	செயல்பாட்டு பகுப்பாய்வு	6	ஆ

சி- சிங்களம் த- தமிழ் ஆ- ஆங்கிலம்

அட்டவணை 27 : நிகழ்நிலையாக வழங்கப்படும் கற்கைநெறிகள் – இயற்கை விஞ்ஞானங்கள்

பகுதி 5 – ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

5.0 ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

5.1 ஆராய்ச்சி செயற்றிட்டங்கள்.்பத்திரங்கள்

பீடம்/நிலையம்	துறை	ஆராய்ச்சி செயற்றிட்டங்கள்	வெளியிட்ட பத்திரங்கள்	சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள்
கல்வி	விசேடதேவைகள் கல்வி		01	
	முன்பிள்ளை மற்றும் ஆரம்பக் கல்வி		02	03
	இரண்டாம் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி		18	01
	கல்விசார் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம்		05	
பொறியியல் தொழில்நுட்பம்	விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கைப் பொறியியல்	03		
	குடிசார் பொறியியல்	90		
	இலத்திரனியல் மற்றும் கணினிப்பொறியியல்		08	16
	கணிதம் மற்றும் பொறியியலின் மெய்யியல்		03	
	இயந்திரப் பொறியியல்		05	
	புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்	04		03
சுகாதார விஞ்ஞானங்கள்	அடிப்படை விஞ்ஞானங்கள்	02	09	06
	மருந்தியல் ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	01	05	04
	தாதியியல்	-	04	15
	மருந்தகம்	-	04	-
	உளவியல் மற்றும் நிபுணத்துவ ஆலோசனை	02	04	06
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள்	மொழிக்கற்கைகள்	01	06	03
	சட்டக் கற்கைகள்		18	10
	ஆங்கில மொழி கற்பித்தல்		01	02
	சமூகக் கற்கைகள்	09	04	
முகாமைத்துவ கற்கைகள்	மனித வள முகாமைத்துவம்		04	10
	சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்			05
	ஒழுங்கமைப்புசார் கற்கைகள்		06	01
	கணக்கீட்டு மற்றும் நிதித் துறை		03	01
இயற்கை விஞ்ஞானங்கள்	தாவரவியல்		12	05
	இரசாயனவியல்		36	
	கணினிவிஞ்ஞானம்		05	
	கணிதம்		04	07
	பௌதீகவியல்	02	20	13
	விலங்கியல்	04	16	17
கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையம்			06	02
நூலகம்			05	04
சூழலியல் கற்கைகள் மற்றும் நிலைபேண் அபிவிருத்தி நிலையம்		2	1	3

அட்டவணை 28: ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் / பத்திரங்கள்

வெளியீடுகளின் விபரங்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன

5.2 புத்தகங்கள்/ காப்பாளர்கள்

பீடம் ∴நிலையம்	புத்தகத்தின் அத்தியாயங்கள்	பூரணப்படுத்திய புத்தகங்கள்	காப்பாளர் வெளியீடுகள்
கல்வி	1		
பொறியியல் தொழில்நுட்பம்	11	1	
சுகாதார விஞ்ஞானங்கள்	-	-	-
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள்	4	3	
முகாமைத்துவ கற்கைகள்	4		
இயற்கை விஞ்ஞானங்கள்	7	1	

அட்டவணை 29: புத்தகங்கள் /காப்புரிமையாளர்கள்

5.3 விருதுகள்


பீடம் ∴நிலையம்	பல்கலைக்கழக விருதுகள்	தேசிய விருதுகள்	சர்வதேச விருதுகள்
கல்வி	5		
பொறியியல் தொழில்நுட்பம்	3		
சுகாதார விஞ்ஞானங்கள்	1	-	1
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள்	1		1
முகாமைத்துவ கற்கைகள்	1		
இயற்கை விஞ்ஞானங்கள்	5	2	

அட்டவணை 30: விருதுகள்

பகுதி 6 – நிலையங்கள் மற்றும் அலகுகள்

6.0 நிலையங்கள் மற்றும் அலகுகள்

6.1 பிராந்திய கல்விச் சேவைகள்



உரு 1: இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்கள்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான தூண்களில் ஒன்றாக பிராந்திய கல்விச் சேவைகள் கருதப்படுகிறது. ஏனைய பெரும்பாலான அரச பல்கலைக்கழங்கள் மத்தியில் இருந்து தொழிற்படும் அதேவேளை, முதன்மை திறந்த தொலைக் கல்வி நிறுவனமொன்றாக அனைத்து குடிமக்களுக்கும் உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்கும் நாடாளாவிய ரீதியான வலையமைப்புடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தொழிற்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் ஆறு பீடங்களும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும், வாழ்நாள் கல்வியைப்பெற விரும்பும் இலக்கு எட்டப்படாதவர்களின் ஆசைகளை அடையச்செய்யவும் பிராந்திய சேவைகள் விரிவுபட்ட ஆதரவினை வழங்குகிறது.

கொழும்பு பிராந்திய நிலையம் நாவலவில் அமைந்துள்ள மத்திய வளாகத்தில் அமைந்துள்ளதுடன் ஏனைய எட்டு பிராந்திய நிலையங்கள் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இதற்கு அப்பால் பல்கலைக்கழகம் நாடளாவிய ரீதியில் 19 கற்கை நிலையங்களைக் கொண்டுள்ளது. நிலையங்களின் இவ் வலையமைப்பு பெரும்பாலும் அனைத்து மாவட்டங்களிலும் வியாபித்துள்ளது. ஒவ்வொரு மாகாணங்களிலும் ஒன்பது பிராந்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன (உரு.1 இனைப் பார்வையிடவும்). கொழும்பு பிராந்திய நிலையம் அதிகளவிலான மாணவர் எண்ணிக்கையினைக் கொண்டுள்ளதுடன் கண்டி பிராந்திய நிலையம் இரண்டாவது அதிக எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டுள்ளது.

பிராந்திய கல்விச் சேவைகளின் தொழிற்பாடுகள்


பிராந்திய கல்விச் சேவைகள் அலகானது கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்காக பெருமளவான உதவிச் சேவைகளை வழங்குகின்றது. தகவல்களை வழங்குதல், விண்ணப்பங்களை சேகரித்தல் மற்றும் சமர்ப்பித்தல், மாணவர்களைப் பதிவுசெய்தல் மற்றும் மீள்பதிவுசெய்தல், மாணவர் நிபுணத்துவ ஆலோசனை வழங்குதல், கற்கைப் பாடப்புத்தகங்களை விநியோகித்தல், நாட் பாடசாலை.ஃ. செயன்முறை வகுப்புக்கள் என்பவற்றினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொடர்ச்சியான மதிப்பீடுகள் மற்றும் இறுதிப் பரீட்சைகளை நடத்துதல் என்பன அத்தகைய சேவைகளில் சிலவாகும். இந்த நாளாந்த தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக, தற்போதைய பெருந்தொற்றின் போது பிராந்திய கல்விச் சேவைகள் ஏனைய அரச பல்கலைக்கழகங்கள் போன்ற வெளிப்புற நிறுவனங்களுக்கு தமது கல்விசார் செயற்பாடுகளை நடத்துவதற்கு பிராந்திய அதன் சேவைகளை விரிவுபடுத்தியது.

2022 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

நிலவும் கோவிட்-19 பெருந்தொற்றுத் தொடர்பாக நாட்டில் நிலவும் நிலைமை நுகர்வோர் சங்கிலி முகாமைத்துவத்தில் பல்வேறு மக்கள் போராட்டங்கள் மற்றும் குழப்பங்களுக்கு வழிவகுக்கும் அதிகரித்துவரும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி என்பன இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நாளாந்த செயற்பாடுகளை பெரிதும் பாதித்தது. எனினும் அனைத்து இடர்களுக்கும் மத்தியில் 2022 ஆம் ஆண்டில் பல முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

- யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திற்கான புதிய ஐந்து மாடிக் கட்டடம் ஒன்றின் கட்டுமானத்தின் பூரணப்படுத்துகை மற்றும் திறந்துவைப்பு
- அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கட்டடங்களுடன்கூடிய புதிய நிலத்தில் கிளிநொச்சி கற்கை நிலையத்தின் விரிவாக்கம்
- பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரின் பங்குபற்றுகையுடன் பிராந்திய கல்விச் சேவைகளின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் "ஓப்பின் டே" ஊக்குவிப்பு முகாம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது
- பிராந்திய கல்விச் சேவைகளினால் நடத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக பல்கலைக்கழக சமூகம் மற்றும் மாணவர்களிடையில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பிராந்திய கல்விச் சேவைகள்-இலத்திரனியல் சஞ்சிகை-"OURESTalk" முதல் முறையாக வெளியிடப்பட்டது.

6.2 நூலகம்





இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நூலக வலையமைப்பு நாவலவில் அமைந்துள்ள பிராதான நூலக வளாகத்தின் பிரதான நூலகம் மற்றும் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், மாத்தறை மற்றும் இரத்தினபுரியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையங்களின் எட்டு நூலகங்கள் என்பவற்றுடன் ஒன்பது நூலகங்களை உள்ளடக்கியுள்ளது.

பிரதான நூலகத்திற்குரிய மொத்த புத்தகங்களான 106இ308 புத்தகங்களில் 1325 புத்தகங்கள் அச்சிடப்பட்ட வடிவிலும் இலத்திரனியல் வடிவிலும் 2022 ஆம் ஆண்டில் பிரதான நூலகத்தற்கு கையளிக்கப்பட்டது. மொத்த பருவ இதழ்களின் தலைப்புக்கள்- அச்சிடப்பட்டவை மற்றும் இலத்திரனியல் 26, மற்றும் ஒலி-ஒளி வளங்கள் 2396.

அண்மைய சட்டங்கள், ஒருங்கிணைந்த சட்டவாக்கம் குறித்த சட்டங்கள், சீர்திருத்த சட்டங்கள், புதிய சட்ட அறிக்கைகள், இலங்கை சட்ட அறிக்கைகள் குறித்த முழு உரை உள்ளடக்கம் என்பவற்றினைக்கொண்ட சட்ட இலங்கை தரவுத்தளம் 2022 இனை நூலகத்தினால் தொடர்ந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. எமரல்ட் மற்றும் ஒக்ஸ்போட் அக்கடமிக்ஸ் எனும் 02 இலத்திரனியல் தரவுத்தளங்களுக்கான அணுகல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒன்றியத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.இந்த சேகரிப்புக்களுக்கு அப்பால் பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு உதவியளிக்கும் கட்டணமற்ற அனுகல்கொண்ட வலைத்தள அடிப்படை தொகுப்புகள் பல காணப்படுகின்றன. கடந்த கால வினாப்பத்திரங்களின் எண்ணியல்மயப்படுத்தப்பட்ட தொகுப்பு, ஆராய்ச்சிக் கட்டுரைக் களஞ்சியம், ஆராய்ச்சிக் கட்டுரை சுருக்கத் தொகுப்பு, பல்கலைக்கழக வெளியீடுகள் மற்றும் திறந்த கல்வி வளங்கள போன்றவற்றினை இத் தொகுப்புகள் உள்ளடக்குகின்றன.(http://lib.ou.ac.lk/) எனும் இலங்கை திறந்த பல்கலைக்கழக இணைய வாயில் ஊடாக இவ் அனைத்து வளங்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது.

பயனாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட நூலக சேவைகளை வழங்கும் நோக்குடன் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தின் நூலகம் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

6.3 பணியாளர் அபிவிருத்தி நிலையம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலையமானது பல்கலைக்கழகத்தின் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துவற்காக கல்விசார் மற்றும் நிர்வாக வேலைகளை மேம்படுத்தவும் அவற்றிற்கு உதவுவதற்கும் என நிறுவப்பட்டதாகும். இதற்காக பல்கலைக்கழகத்தின் பணியாளர் வினைதிறனாகத் தொழிற்படப் தேவையான திறன்களையும், திறமைகளையும் விருத்திசெய்துகொள்வதற்கான பணியாளர் அபிவிருத்தி நிலையமானது பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் வேலைத்திட்டங்களையும் ஒழுங்குசெய்து வளப்படுத்திவருகின்றது. கல்விசார் பணியாளர்கள், நிர்வாக பணியாளர்கள் மற்றும் கல்விசாரா பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து வகையான பணியாளர்களின் துறைசார் விருத்திக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வேலைத்திட்டங்களின் பரப்பானது வேலைச்சூழலின் திறன்களை மட்டும் உள்ளடக்காது வேலை மற்றும் வாழ்க்கைச் சமநிலையூடாக தனிநபர் வளர்ச்சியினையும் உள்ளடக்குகிறது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் புதிதாக உள்வாங்கப்பட்ட விரிவுரையாளர்களுக்கு (தகுதிகாண்) நடத்தப்படும் உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தின் முக்கிய நிகழ்ச்சித்திட்டமாக விளங்குகின்றது. அனைத்து விரிவுரையாளர்களும் (தகுதிகாண்) அவர்களுடைய பதவியை உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருக்க வேண்டும். பணியாளர் அபிவிருத்தி நிலையமானது உயர் கல்வியில் கற்பித்தல் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தினை 7 முறை நடத்தியிருக்கின்றது. புதிதாக உள்வாங்கப்பட்ட சிரேஷ்ட கல்விசார் உறுப்பினர்களுக்கான அறிமுக நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையின் ஏனைய

பல்கலைக்கழகங்களிடையில் நன்கு இனங்காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டமாகும்.பணியாளர் அபிவிருத்தி நிலையமானது முகாமைத்துவ உதவியாளர், வேலைகள் உதவியாளர், தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏனையோரிற்கும் தேவையேற்படும் போது அறிமுக நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகிறது. பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பணியாளர்களினதும் தொழில் விருத்தியினை மேம்படுத்துவதற்கு பல மேலதிக துறைசார் அபிவிருத்தி வேலைப்பட்டறைகள் மற்றும் புதிதாக இணைவோருக்கான கற்கைநெறிகள் என்பனவும் முன்னெடுக்கப்படுகின்றன.





மொழிக் கற்கைகள் துறையுடன் இணைந்து ஆங்கில மொழிக்கான தொடர்பாடல் திறன்கள் நிகழ்ச்சித்திட்டம், மத்திய வளாகம் மற்றும் பிராந்திய கல்விச் சேவைகளில் உள்ள உதவி மேசை பணியாளர்களுக்கான நட்டிகெட் மற்றும் எற்றிகெட் தொடர்பான வேலைப்பட்டறை, புதிதாக உள்வாங்கப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்களுக்கான அறிமுக நிகழ்ச்சித்திட்டம், காப்பாளர் மற்றும் அறிவுச் சொத்து உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு, கலைமாணியில் நூலக தகவல் சேவையில் தகைமைச் சான்றிதழ் மட்ட கற்கைநெறி கட்டமைப்புக்கள் தொடர்பான அறிவுறுத்தல் வேலைப்பட்டறை என்பன 2022 ஆம் ஆண்டில் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டன. மேலும் நிகழ்நிலை கற்கைநெறி வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஒரு வேலைப்பட்டறை, கற்கைநெறி சுருக்கத்தினை விருத்திசெய்தல் தொடர்பான ஒரு வேலைப்பட்டறை, நிகழ்நிலை மதிப்பீட்டு தந்திரோபாயங்கள் தொடர்பான ஒரு வேலைப்பட்டறை, தொழில் வளர்ச்சி தொடர்பான கல்விசார் பணியாளர்களை வழிகாட்டுதல் தொடர்பான ஒரு வலைத்தள கருத்தரங்கு என்பனவும் 2022 ஆம் ஆண்டில் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டன. மேலும் என்வீவீஓ- பண்புசார் தரவு பகுப்பாய்வு பொதி தொடர்பான ஒரு வேலைப்பட்டறை, பல்வகைமையுடன் வாழக் கற்றுக்கொள்ளுதல் தொடர்பாக பயிற்சியாளர்களுக்கான பயிற்சி, நிர்வாகப் பணியாளர்களுக்கான சட்டபூர்வ மகப்பேற்று ஊதியத்தின் செயற்பாட்டு திட்டத்தினை பூரணப்படுத்துவதற்கான ஒரு வேலைப்பட்டறை, இலங்கை திறந்த பல்கலைக்கழக ஹவுஸ் ரைல் ரெம்பிலெட்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான ஒரு வேலைப்பட்டறை, வினாப்பத்திரம் ஒன்றினை எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பான ஒரு வேலைப்பட்டறை, வலையமைப்பு முகாமையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான ஓமிஸ் வேலைப்பட்டறை, பிராந்திய கல்விச் சேவைகள் பணியாளர்களுக்கான தர நிர்ணயம் தொடர்பான ஒரு விழிப்புணர்வு அமர்வு என்பனவும் 2022 ஆம் ஆண்டில் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட சில செயற்பாடுகளாகும். திறன்களுக்கான வாழ்நாள் கல்வி வாய்ப்புக்களை திறந்த தொலைக்கல்வி எவ்வாறு வழங்க முடியும் என்பது தொடர்பான வேலைப்பட்டறை, வேலைப்படையினை தரமுயர்த்துதல் மற்றும் மீள்திறனாக்கலில் வளவளாவராக பங்கேற்ற பொது நலவாயக் கற்றலின் தலைவர் பேராசிரியர் ஆஷா கன்வர் இன் பங்குபற்றுதலுடன் 2022 இல் தொழில் தொடர்பு நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட மற்றொரு முக்கிய நிகழ்வாகும். மேலதிகமாக உள நல்வாழ்வினை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள், ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிபுணத்துவ ஆலோசனை வேலைப்பட்டறை என்பனவும் வருடாந்தம் நடத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்துவதற்கு நூலகம், பால் சமபங்கு மற்றும் சமத்துவம், கல்வி தொழில்நுட்பம் மற்றும் ஊடக நிலையம், மொழிக் கற்கைகள் துறை போன்ற பல்வேறுபட்ட அலகுகளுடன் பணியாளர் அபிவிருத்தி நிலையம் இணைந்து தொழிற்பட்டது. இவ் அனைத்து வேலைப்பட்டறை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் பணியாளர் அபிவிருத்தி நிலையம் அனைத்து பங்குதாரர்களினதும் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகள் மேம்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் அனைத்து வகைப் பணியாளர்களுக்கும் 24 வேலைப்பட்டறைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த முடிந்தது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பெருமளவான ஊழியர்கள் இச் செயற்பாடுகளில் பங்குபற்றியதுடன் அவற்றில் சில சூம் வாயிலாகவும், சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி நேருக்கு நேராகவும் இரு வழியாகவும் நடத்தப்பட்டன.

6.4 தொழில் வழிகாட்டல் அலகு

எதிர்கால வேலைப்படையின் சமூக பொறுப்புள்ள மற்றும் வினைத்திறனான உறுப்பினராக வருவதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு உதவுதல் தொழில் வழிகாட்டல் அலகின் பிரதான நோக்கமாகும்.

தொழில்வாய்ப்பொன்றுடன்கூடிய பட்டதாரிகளாக பயிற்சியினைப் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதிலும் தொழில்புரியும் பட்டதாரிகளாக தொழில் வளர்ச்சியினை உறுதிசெய்வதிலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு முக்கிய வகிபங்கொன்றினை வகிக்கிறது.

இந்த அலகானது நாவலவின் புதிய கொழும்பு பிராந்திய நிலைய கட்டடத்தில் அமைந்துள்ளது. வேலை உலகின் தேவைகளை சமாளிப்பதற்குத் தேவையான திறன்கள் மற்றும் ஆற்றல்களை விருத்திசெய்வதற்கு பட்டதாரிகளுக்கு உதவுவதற்காக தொழில்வழிகாட்டல் அலகு, பீடங்களுடன் இணைந்து வேலைப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளை ஒழுங்குசெய்தது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இளம் கண்டுபிடிப்பாளர் கழகம் இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழுவுடன் இணைந்து தொழில் வழிகாட்டல் அலகினால் ஆரம்பிக்கப்பட்டுவைக்கப்பட்டது.

கழகத்தின் ஸ்தாபனமானது 25 நவம்பர் 2022 அன்று கொழும்பில் கல்வி அமைச்சு மற்றும் இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழு ஆகியவற்றின் பங்குபற்றுகையுடன் லேக் ஹவுஸில் உத்தியோகபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டது.



இளம் கண்டுபிடிப்பாளர் கழகத்தின் மாணவர்களுக்கான முதலாவது வேலைப்பட்டறை மற்றும் ஆய்வுகூட விஜயம் என்பன 26 நவம்பரில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பணிப்பாளர்/ தொழில் தொடர்பு நிலையம் / முகாமையாளர் / சைட்ஸ் மற்றும் பணிப்பாளர் / தொழில் வழிகாட்டல் அலகு



15 செப்ரம்பர் 2022 அன்று பிலியந்தல மத்திய கல்லூரியில் கஸ்பாவ பிரதேச செயலகத்தின் உயர்தரப் பீட்சை மாணவர்களுக்கான தொழில் சந்தை ஒன்றில் பல்கலைக்கழக நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்காக கொழும்பு பிராந்திய நிலைய பணியாளர்களுடன் இணைந்து தொழில் வழிகாட்டல் அலகு பங்குபற்றியது.



க.பொ.த (உ/த) பரீட்சை மாணவர்களுக்கான உ/த ஆங்கில இலக்கியம் குறித்த கருத்தரங்கொன்றினை நிபுணத்துவ ஆலோசனை மற்றும் வெளிவாரி நிலைய செயற்றிட்டமொன்றாக இலங்கை திறந்த பல்கலைக்கழக மொழிக் கற்கைகள் துறையுடன் இணைந்து தொழில் வழிகாட்டல் அலகு ஒழுங்கமைத்தது.
கருத்தரங்கு ஒக்டோபர் 19 மற்றும் 20, 2022 ஆகிய திகதிகளில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது



ஐக்கிய இராச்சிய புலமைப்பரிசில்கள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பல்வேறு கவர்ச்சிகரமான வேலைப்பட்டறைகளை தொழில் வழிகாட்டல் அலகு நடத்தியது. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளுடன் ஜேர்மனியில் உங்களது தொழில் வாழ்வை ஆரம்பியுங்கள்.

6.5 அச்சகம் மற்றும் மத்திய அனுப்புகை அலகு

அச்சிடல் அச்சகம்



அறிமுகம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அச்சகமானது ஜக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட(ருனூடீ) நிதியுதவி நிகழ்ச்சித்திட்டமாக 1982 இல் அச்சகம் நிறுவப்பட்டது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவுசெய்த மாணவர்களுக்கு தேவையான கற்கை சாதனங்களை வழங்குவதற்குவதற்கென இது நிறுவப்பட்டது. குறைந்தபட்ச உபகரணங்களுடன் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்து, தொலைக் கற்பித்தல் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் - தொலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் காலத்திற்கு காலம் வழங்கப்பட்ட புதிய இயந்திரங்களுடன் ஒரு முழு அளவிலான அச்சிடல் அச்சகமாக பல்கலைக்கழக அச்சகம் படிப்படியாக அபிவிருத்தியடைந்துள்ளது.

தற்போது கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள்- பல்கலைக்கழகத்தின் ஆறு பீடங்களால் நடத்தப்படுகின்ற வேறுபட்ட கற்கை நெறிகளை ஆராய்ச்சித் தொடரும் 40,000 மாணவர்களுக்குத் தேவையான கற்கை சாதனங்களை விநியோகிக்கின்றது. பதிவுசெய்த மாணவர்களுக்கு அச்சிடப்பட்ட கற்கைநெறி சாதனங்களை வழங்குவதற்கு அப்பால் இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூகத்திற்கு பின்வரும் சேவைகளை அச்சகம் வழங்குகிறது.

1. மாணவர் வழிகாட்டல் புத்தகங்களை அச்சிடல்
2. பல்வேறு கற்கை நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய விடயத் தொகுப்புக்களை அச்சிடல்
3. கைநூல்களை அச்சிடல்
4. துண்டுப்பிரசுரங்கள் மற்றும் பிரசுரங்களை அச்சிடல்
5. செயற்பாட்டுத் திட்டங்களை அச்சிடல்ஷ

கல்விசார் தொடர்பு செயற்பாடுகள் என பெயரிடக்கூடிய மேலே குறிப்பிடப்பட்ட அச்சிடல் செயன்முறைகளுக்கு அப்பால் பல்வேறு நிர்வாக பிரிவுகளுக்குத் தேவைப்படும் கற்றல் சாதனங்களும் பல்கலைக்கழக அச்சகத்தினால் அச்சிடப்படுகின்றன.

இலங்கை திறந்த பல்கலைக்கழக அச்சகத்தின் அச்சு கற்கை உபகரணங்கள் - 2022

	கற்கை சாதனங்களின் பிரதிகளின் எண்ணிக்கை	கற்கை துண்டுப்பிரசுர பிரதிகளின் எண்ணிக்கை	ஏனைய சாதனங்களின் பிரதிகளின் எண்ணிக்கை
ஜனவரி	49,090	100	238,369
பெப்ரவரி	35,250	2,600	25,881
மார்ச்	56,675	-	2,407
ஏப்ரல்	27,670	850	230
மே	31,181	5,500	33,815
ஜூன்	53,682	-	9,161
ஜூலை	17,830	-	4,934
ஓகஸ்ட்	60,611	790	184,132
செப்டம்பர்	43,428	6,000	46,048
ஒக்டோபர்	65,448	15,000	82,794
நவம்பர்	45,756	-	392,213
டிசம்பர்	34,778	250	9,950
மொத்தம்	**521,399**	**31,090**	**1,029,934**

மத்திய அனுப்புகை அலகு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் மத்திய அனுப்புகை அலகானது கற்கை சாதனங்களை களஞ்சியப்படுத்தல் அனுப்புதல் என்பவற்றில் முக்கிய இடத்தினை பெற்றுக்கொள்வதுடன் தேவையேற்படும்போது பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது கற்கை சாதனங்களின் இருப்புத்தன்மையினையும் உறுதிசெய்கின்றது. பதிவுசெய்த மாணவர்களின் கற்கை சாதனங்களை களஞ்சியப்படுத்துவதிலும் அனுப்புவதிலும் இது ஆறு பீடங்களிற்கும் சேவை வழங்குனராக விளங்குகின்றது. இது 576 உப றாக்குகளை கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு றாக்குகளின் அளவானது கற்கைசாதனங்களை முறையாக களஞ்சியப்படுத்தி 1.5 m^3 அளவுகொண்டதாக விளங்குகின்றது.

இலக்குகள்:

- அச்சு நடவடிக்கைகள் முடிந்தவுடன் உடனடியாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அச்சகத்திலிருந்து அனைத்து கற்கை சாதனங்களையும் சேகரித்தல்.
- 09 பிராந்திய நிலையங்களுக்கும் 18 கற்கை நிலையங்களுக்கும் கற்கை சாதனங்களை அனுப்பிவைத்தல்.
- செயற்பாடுகள்: மத்திய அனுப்புகை அலகானது பின்வருவனவற்றிற்கு பொறுப்பானதாக அமைகின்றது:
  - அச்சிடப்பட்ட கற்கைசாதனங்கள் அனைத்தையும் களஞ்சியப்படுத்தல்.
  - ஓப்பந்த தபால் சேவை மூலம் பதிவுசெய்த மாணவர்களுக்கு கற்கைசாதனங்களை தபால் மூலம் அனுப்பிவைத்தல்
  - மாணவர்களுக்கு தேவையேற்படும் போது கற்கைசாதனங்களை விநியோகித்தல்
  - சீ.ஜீ.ஆர் , இலங்கை திறந்த பல்கலைக்கழக லொறி மற்றும் ஒப்பந்த தபால் சேவையூடாக நாடளாவிய ரீதியில் காணப்படும் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களிற்கு கற்கை சாதனங்களை அனுப்பிவைத்தல்.
  - பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் இருந்து திருப்பி அனுப்பப்படும் ஏதேனும் கற்கை சாதனங்களைப் பெற்றுக்கொள்ளல்.
  - ஒவ்வொரு கற்கை சாதனங்களினதும் பிரதியினை பிரதான நூலகத்திற்கு வழங்குதல்.

வசதிகள்/ உட்கட்டமைப்பு.∴ வளங்கள்:

- கற்கை சாதனங்களை களஞ்சியப்படுத்துவதற்கான சிறந்த சூழல் நிலையுடன் கூடிய 45x20 m^2 அளவிலான கட்டடம்
- குறிப்பிடப்பட்ட நோக்கங்களை பூரணப்படுத்துவதற்காக மத்திய அனுப்புகை அலகில் 12 பணியாளர்கள் கடமையாற்றுகின்றனர்.
- 576 உப றாக்குகள், ஒரு உப றாக்கின் அளவானது 1.5 m^3 ஆகும்.
- இது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அச்சகத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றது.
- மூன்று நிரந்த பணியாளர்கள் (முகாமைத்துவ உதவியாளர்கள்- 03)
- ஒன்பது ஒப்பந்த பணியாளர்கள் (3 செயற்றிட்ட உதவியாளர்கள் மற்றும் 3 செயற்பாட்டு உதவியாளர்கள்)

6.6 தேசிய நிகழ்நிலை தொலைக்கல்விச் சேவைகள் நிலையம்

உயர் கல்வி அமைச்சின் கீழ் தொலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக 2013 ஆம் ஆண்டு தேசிய நிகழ்நிலை தொலைக்கல்வி சேவைகள் நிலையம் நிறுவப்பட்டது. இது 2015ஆம் ஆண்டு பங்குனி மாதம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டது. இலங்கையில் தொலைக் கல்வியில் முன்னனி வசதிப்படுத்துனர்களாகவும் வழங்குனர்களாகவும் திகழ்வதே எமது இலக்காகும்.
அந்த இலக்குடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் உள்ள தேசிய நிகழ்நிலை தொலைக்கல்வி சேவைகள் நிலையமானது பின்வரும் வழிகளில் நிகழ்நிலைக் கல்விக்கு ஆதரவு வழங்குவதற்கான வசதிகளைக் கொண்டிருக்கின்றன.

- எமது வளங்களுடன் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப நேரடியாகவும்.∴ நிகழ்நிலையாகவும் வேலைப்பட்டறைகள் .∴ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்
- நேரடியாக .∴ நிகழ்நிலையாக நேரடிப் பரீட்சைகளை நடத்துவதற்கு ஒழுங்கமைத்தல் மற்றும் வசதிகள் வழங்கல்
- நிகழ்நிலையாக பரீட்சைகளை நடத்துவதற்கு மாணவர் மதிப்பீட்டு முறைமைகள் மதிப்பீடுகள் மற்றும் முறைமைகள் குறித்த பயிற்சியினை வழங்கல்
- நிகழ்நிலை கற்றல் சாதன அபிவிருத்தி.∴ கற்றல் சாதனங்களை நிகழ்நிலை வடிவிற்கு மாற்றுதல் மற்றும் எமது சேர்வர்கள் மூலம் அவற்றினை வழங்குதல்
- வெளிப்புற நிறுவனங்களுக்கான இலங்கை திறந்த பல்கலைக்ககழக விரிவுரை அறை மற்றும் பரீட்சை மண்டப வசதிகள் வழங்கல்
- வெளிநிறுவனங்களால் கோரப்படும் (இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஆற்றுவதற்கு சாத்தியமான) வேறு ஏதேனும் சேவைத் தேவைப்பாடுகள்

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது தேசிய நிகழ்நிலை தொலைக்கல்விச் சேவை நிலையம் வெளிப்புற நிறுவனங்களுக்கு பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது. ஆகவே இலத்திரனியல் ஊடகத்தினைப் பயன்படுத்தி தேசிய நிகழ்நிலை தொலைக்கல்விச் சேவை நிலையம் வெளிப்புற நிறுவனங்களுக்கு மேலதிக பிரபல்யமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

6.7 சர்வதேச உறவுகள் அலகு

சர்வதேச உறவுகள் அலகு 2013 ஒக்டோபர் மாதம் நிறுவப்பட்டது. 1990 ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை திறந்த பல்கலைக்கழக நிலையியற் சட்டத்தின் பிரிவு 19 உடன் இணைந்து வாசிக்கப்படவேண்டிய 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 135 இன் கீழ் இலங்கை திறந்த பல்கலைக்கழக பேரவையினால் உருவாக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் இலங்கை திறந்த பல்கலைக்கழக துணைவிதி இலக்கம் 09 இன் கீழ் தொழிற்படுகின்றது.

சர்வதேச உறவுகள் பிரிவானது துணைவேந்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணிப்பாளர் ஒருவரினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. அதன் நிர்வாக மற்றும் நிதியியல் செயற்பாடுகள் முகாமைத்துவ சபையினால் நிர்வகிக்கப்படுகின்றன. சர்வதேச உறவுகள் அலகின் பணிப்பாளர் துணைவேந்தரின் சிபாரிசுடன் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நியமிக்கப்படும் கல்விசார் அலுவலராக இருத்தல் வேண்டும்.

சர்வதேச உறவுகள் தொடர்பான மூல உபாயங்களை வழங்கும் போதும் உலகில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள் உள்ளடங்களாக ஏனைய நிறுவனங்களுடன் முறையான தொடர்பாடல் தரப்பு இணைப்புக்களை ஏற்படுத்தும் போதும் சர்வதேச உறவுகள் பிரிவானது பல்கலைக்கழகத்திற்கு உயரிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்றது.

சர்வதேச உறவுகள் பிரிவின் நோக்கங்கள் கீழ்வருமாறு:

அ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிறுவனங்கள், பீடங்கள், மூதவை மற்றும் பேரவை என்பவற்றிற்கு தந்திரோபாயங்கள் மற்றும் நாடுகளுக்குரியதான பரிந்துரைகளை உருவாக்குதல்

ஆ)அபிவிருத்திகளை ஒருங்கிணைத்தல் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இருதரப்பு மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகள் மற்றும் வெளிநாடுகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்பவற்றினை மீளாய்வுசெய்தல்.

இ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கான சர்வதேச கூட்டு ஆராய்ச்சி மற்றும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

ஈ) சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களாகவும் ஆசிரியர்களாகவும் தம்மை விருத்தி செய்துகொள்வதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அலுவலர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்குதல்.

உ)சர்வதேச ஆராய்ச்சிகள் மற்றும் ஏனைய நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களிப்புசெய்வதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர்களுக்கு உதவுதல்.

ஊ)இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர் மற்றும் மாணவர்களுக்கு உலகலாவிய ரீதியில் இணைந்துசெயற்படவும், பரம்பலடைவதற்கும், ஒத்துழைக்கவும் சந்தர்ப்பம் வழங்கல்.

எ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளுக்கு வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை கண்டறிந்துகொள்ள உதவுதல்.

ஏ)வெளிநாட்டு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய விருந்தினர்களுக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற காலப்பகுதியில் தேவையான உதவிகளை வழங்குதல்.

ஐ) வெளிநாட்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் பங்குடைமைகளை முன்னேற்றுதல்.

ஒ)முக்கிய சர்வதேச அரசாங்கம் மற்றும் அரசாங்கம்சாரா முகவர்கள், இலங்கையில் உள்ள தூதரக அமைப்புக்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை அமைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புகளை ஒருங்கிணைத்தல்.

சர்வதேச உறவுகள் அலகானது 2013 முதல் 2022 வரையிலான கடந்த ஒன்பது ஆண்டுகளில் மேற்சொல்லப்பட்ட இலக்குகளை அடைவதில் துடிப்புடன் ஈடுபட்டது. பின்வருவன செயற்பாடுகளின் சுருக்கமாகும்

.

1. இருதரப்பு மற்றும் பல்தரப்பு கூட்டு ஒப்பந்தங்களை வசதிப்படுத்துதல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

தொடர் இல.	நிறுவனத்தின் பெயர்	நாடு	கைச்சாத்திடப்பட்ட ஆண்டு
01	திறந்த கல்விசார் வளங்கள் அமைப்பு	நியூசிலாந்து	2022
02	சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம்	பிலிப்பைன்ஸ்	2022
03	ஐன்ரீஜ சர்வதேச பல்கலைக்கழகம்	மலேசியா	2022
04	Travel to Farm (T2F)	டென்மார்க்	2022
05	விஞ்ஞானத்திற்கான சர்வதேச அமைப்பு	சுவீடன்	2022
06	யுனெஸ்கோ வின் கீழ் அபிவிருத்தி அடைந்துவரும் உலகில் விஞ்ஞானத்தில் பெண்கள் முன் தொழில் பெண் விஞ்ஞானிகள் நிகழ்ச்சித்திட்டம்	இத்தாலி	2022
07	ஏற்றுமதி விவசாய திணைக்களம்	இலங்கை	2022

கிடைக்கப்பட இருக்கும் அனுமதிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள்

தொடர் இல.	நிறுவனத்தின் பெயர்	நாடு	செல்லுபடியாகும் காலப்பகுதி
01	பாரதிதாசன் பல்கலைக்கழகம்இ திருச்சிராப்பள்ளி	இந்தியா	5 வருடங்கள்
02	வற்லான்ட் பொலிரெக்னிக் பல்கலைக்கழகம்	கனடா	3 வருடங்கள்
03	ஷங்காய் திறந்த பல்கலைக்கழகம்	சீனா	5 வருடங்கள்
04	வளர்ச்சி ஒப்பந்தம் – எசெக்ஸ் பல்கலைக்கழகம்	ஐக்கிய இராச்சியம்	5 வருடங்கள்
05	என்ட் ஒப் லைப் தாதியியல் கல்வி கூட்டமைப்பு	இந்தியா	3 வருடங்கள்
06	சீஎன்என்சீ லண்டன் பிறைவட் லிமிற்றட்	ஐக்கிய இராச்சியம்	3 வருடங்கள்
07	வேக்போஸ் யூரோப் யீஎம்பீச் (வீ கெயார் தாதியியல் பாடசாலை)	ஜேர்மனி	5 வருடங்கள்

தற்போதுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்தங்களை புதுப்பித்தல்

- லூவன் லிம்பேர்க் பல்கலைக்கழக கல்லூரி பெல்ஜியம் – பேரவை மட்டத்தில்

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்தங்களை எதிர்பார்த்தல்

நோயல் மெல்போன் தொழில்நுட்ப கல்லூரிப் பல்கலைக்கழகம் அவுஸ்திரேலியா: 2022 இல் பங்குடமைகளை விருத்திசெய்வது குறித்து இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் நோயல் மெல்போன் தொழில்நுட்ப கல்லூரிப் பல்கலைக்கழகம் அவுஸ்திரேலியா என்பன பல்வேறு கூட்டங்களை நடத்தியது. பேராசிரியர் பீற்றர் ஜே கொலோ பிரதி துணைவேந்தர் பூலோக மற்றும் உப தலைவர் நோயல் மெல்போன் தொழில்நுட்ப கல்லூரிப் பல்கலைக்கழகம் அவுஸ்திரேலியா தலைவர் நோயல் மெல்போன் தொழில்நுட்ப கல்லூரிப் பல்கலைக்கழகம் வியட்னாம் அவர்கள் இரண்டு அல்லது மூன்று நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்காலத்தில் பத்து வரை அதிகரிப்பதற்கு அனுமதிப் பாதைகளை விருத்திசெய்வதற்கான அவர்களது ஆர்வத்தினை குறிப்பிட்டு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதற்கு பதிலளிப்பதற்கு சர்வதேச உறவுகள் அலகு பீடங்களின் உதவியுடன் பரந்துபட்ட முன்மொழிவொன்றை உருவாக்கி டிசம்பரில் நோயல் மெல்போன் தொழில்நுட்ப கல்லூரிப் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியாவிற்கு சமர்ப்பித்தது. அனுமதிப் பாதைகள் ஊடாக நோயல் மெல்போன் தொழில்நுட்ப கல்லூரிப் பல்கலைக்கழகம் அவுஸ்திரேலியாவுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை இணைப்பதற்கு கல்விசார் ஒத்துழைப்பிற்கான முன்மொழிவு என்ற தலைப்பிலான முன்மொழிவு பின்வரும் முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

- நோயல் மெல்போன் தொழில்நுட்ப கல்லூரிப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகங்களுக்கு இடையில் Split-site தத்துவவியல் கலாநிதி நிகழ்ச்சித்திட்டம்
- நோயல் மெல்போன் தொழில்நுட்ப கல்லூரிப் பல்கலைக்கழக நுழைவுத் தகைமையாக விஞ்ஞானத்தில் உயர் சான்றிதழுக்கான அங்கீகாரம்
- பணியாளர் பரிமாற்றம்
- பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப் பாதை விஞ்ஞானமாணி, முகாமைத்துவ கற்கைகள்மாணி, மருந்தியல் ஆய்வுகூட விஞ்ஞானமாணி, தொழில்நுட்பமாணி சிறப்புப் பட்டம் (ஆங்கிலம்). தொடர்புடைய தன்மை, தற்போதைய எதிர்கால கேள்வி, தொழில் வாய்ப்புக்கள், முன்னேற்றப் பாதைகள் மற்றும் உள்நாட்டில் ஒத்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அணுகல் போன்ற காரணிகளின் அடிப்படையில் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தெரிவு அமைந்தது.

நோயல் மெல்போன் தொழில்நுட்ப கல்லூரிப் பல்கலைக்கழகம் அவர்கள் தமது முன்மொழிவை மீளாய்வுசெய்து மேலதிக பேச்சுவார்த்தைகளுக்காக குழு ஒன்றினை நியமித்ததாக அறிவித்தது.

- ***இன்னோபொலிஸ் பல்கலைக்கழகம் ரஷ்யா:*** ரஷ்யாவிற்கான இலங்கை தூதுவரால் அறிமுகப்படுத்தப்பட்ட இப் பல்கலைக்கழகம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினுடனான முதலாவது கூட்டத்தினை ஒக்டோபர் 20, 2022 அன்று நடத்தியது. ரஷ்யாவில் தகவல் தொழில்நுட்பத்திற்காக நன்கு அறியப்படுகின்ற பல்கலைக்கழகங்களில் இதுவும் ஒன்றாகும். இன்னோபொலிஸ் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகங்களுக்கிடையில் பல தொடர்ச்சியான சந்திப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் வீதி வரைபடம் ஒன்றிற்கான எதிர்கால வீதி வரைபடம் வரையப்பட்டது. இதற்கு அப்பால் இன்னோபொலிஸ் உடன் இணைந்து கூட்டு கல்விசார் செயற்பாடுகள் குறித்து இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் உரிய கல்விசார் துறைகளுடன் சர்வதேச உறவுகள் அலகு பல சந்திப்புக்களை நடத்தியது. சர்வதேச உறவுகள் அலகு இன்னோபொலிஸ் உடன் தகவமைப்பு ஆராய்ச்சி ஏற்றுமதியினை மேற்கொள்வது குறித்து டு3கு செயற்றிட்ட பங்குதாரரான விவசாயத் துறையுடன் சந்திப்பு ஒன்றினையும் நடத்தியது.

2. கூட்டு ஆராய்ச்சி மற்றும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழக பணியாளர்களுக்காக சந்தர்ப்பங்கள் வழங்கல்

சர்வதேச கூட்டுச் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்களை உருவாக்கல்

'overseas ready' நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்திக்கான வழிகாட்டல்

திறந்த பல்கலைக்கழகங்களின் ஆசிய ஒன்றியம் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான – பல்கலைக்கழக பணியாளர் பரிமாற்றுகை கூட்டுறவு (புதுப்பிக்கப்பட்டது)

உலகலவில் கூட்டிணைந்து செயற்படவும், பரப்புவதற்கும் பங்களிப்பு செய்வதற்கும் வாய்ப்புக்களுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழக பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் விழிப்புணர்வை உருவாக்கல்

e-newsletters கழச வாந முருளுடு இலங்கை திறந்த பல்கலைக்கழக வெளிநாட்டு விருந்தினர்களுடன் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் நிகழ்வுகளின் கல்விசார் வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்கு இரண்டு இ-செய்தித்தாள்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவை '*Opportunities and Prospects*' மற்றும் '*Events and Visitors*' எனப் பெயரிடப்பட்டு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை விநியோகிக்கப்படுகின்றன.

அனைத்து பீட சபைகளினதும் நிகழ்ச்சி நிரல்களில் சர்வதேச உறவுகள் அலகின் செயற்பாடுகள்: 2020 ஆம் ஆண்டின் 26 வது முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின்படி அனைத்து பீடங்களினதும் நிகழ்ச்சி நிரலொன்றாக சர்வதேச உறவுகள் அலகின் செயற்பாடுகள் அறிக்கையிடப்பட்டன. இது பணியாளர்களுக்கிடையில் வாய்ப்புக்கள் மற்றும் நிகழ்வுகளின் விழிப்புணர்வின் உருவாக்க உதவுவதுடன் சர்வதேச உறவுகள் அலகின் மேலதிக அபிவிருத்திக்கான பிரதிபலிப்பு பின்னூட்டல்களைப் பெற்றுக்கொள்கின்றது.

***விசேட திட்டம் ஒன்றின் ஊடாக* திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றிய வருடாந்த மாநாடு -2022 இல் பங்குபற்ற இலங்கை திறந்த பல்கலைக்கழக பணியாளர்களை வசதிப்படுத்தல்**

நாட்டில் நிலவும் இக்கட்டான சூழ்நிலை மற்றும் வெளிநாட்டு போக்குவரத்து தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகள் காரணமாக, திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றியம் 2022 இற்கான சுருக்கங்களை சமர்ப்பித்த பணியாளர்கள் மாநாட்டுப் பதிவுக் கட்டணத்தினை செலுத்தி பங்குபற்றுவதற்கான வழியினை கண்டுகொள்ளலாம். சர்வதேச உறவுகள் அலகானது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கான மானியத் திட்டத்தினைப் பெறுவதற்கும் நிகழ்நிலையில் பங்குபற்றுதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் பொதுநலவாயக் கற்றல் மற்றும் திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றியம் என்பவற்றிலிருந்து விசேட கோரிக்கை ஒன்றினை விடுத்தது. பதிவுசெய்தலுக்காக திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றியம் இலங்கை திறந்த பல்கலைக்கழக பணியாளர்களுக்கு 6 உறுப்புரிமைகளை வழங்கியிருந்தது என்பதனையும் திறந்த பல்கலைக்கழக ஆசிய ஒன்றியம் 2022 இல் சுருக்கங்களை அளிப்பதற்கு விசேட வாய்ப்பு ஒன்றினையும் அது வழங்கியிருந்தது என்பதனை மிகுந்த நன்றியுணர்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வலைத்தள கருத்தரங்குத் தொடர்

வலைத்தள கருத்தரங்கின் தலைப்பு	வழங்குபவர்	ஒருங்கிணைந்த நிறுவனம்
ஐக்கிய இராய்ச்சிய புலமைப்பரிசில்கள் நிகழ்ச்சித்திட்டம் திகதி : 06/10/2021	திருமதி அயுனி முனசிங்க	பிரித்தானிய உயர்ஸ்தானியர் ஆணைக்குழு
	திருமதி தீப்தி விஜேசிங்க	பிரிட்டிஷ் கவுன்சில்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சர்வதேச மாநாட்டினை வசதிப்படுத்தல்

வேலைப்பட்டறை.'. மாநாட்டின் பெயர்	தூதுவர்	ஒருங்கிணைந்த நிறுவனம்	சர்வதேச உறவுகள் அலகின் தொழிற்பாடுகள்
முகாமைத்துவம் மற்றும் முயற்சியாண்மை குறித்த முதலாவது சர்வதேச மாநாடு 2022	உள்நாடு மற்றும் சர்வதேசம்	இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (நிகழ்நிலை)	அமைப்புக்கள் மற்றும் பங்குதாரர்களின் நிறுவப்பட்ட அலைவரிசைகளின் ஊடாக வெளிநாடுகளில் கற்கைநெறி ஊக்குவிப்பு நடவடிக்கை
சர்வதேச திறந்த பல்கலைக்கழக ஆராய்ச்சி அமர்வுகள் 2022	உள்நாடு மற்றும் சர்வதேசம்	இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (நிகழ்நிலை)	

3. **வெளிநாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பங்குடைமைகளில் இலங்கை திறந்த பல்கலைக்கழக நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதல்**

வெளிநாட்டு மாணவர்களுக்கான புதுப்பிக்கப்பட்ட தகவல்

'Overseas ready' நிகழ்ச்சித்திட்டங்கள் *: சர்வதேச உறவுகள் அலகானது வெளிநாட்டு மாணவர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை பின்பற்றுவதற்கான வழிகாட்டல்களை வழங்குகிறது. 2023 முதல் விலங்கியல் துறையினால் வெப்ப மண்டல உயிரியல் பல்வகைமை மற்றும் சூழலியல் தொகுதி துறையில் கற்கைநெறிகள் வழங்கப்படவுள்ளன.*

4. **வெளிநாட்டு தொழில் முன்னேற்றங்களை ஆராய்வதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு உதவுதல்:**

வெளிநாட்டு கல்விசார் நிறுவனங்களில் இலங்கை திறந்த பல்கலைக்கழக பழைய மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்: பழைய மாணவர் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் தொடர்பினை பேணுவதற்கு சர்வதேச உறவுகள் அலகினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டது. இலங்கை திறந்த பல்கலைக்கழக பழைய மாணவர்களுக்கு

அவர்களது தகவல்களை சேகரித்தல் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் குறித்த அவர்களது பார்வையினை பதிவுசெய்தல் போன்றவற்றிற்காக கூகுள் படிவத்தில் வினாக்கொத்து மதிப்பாய்வு ஒன்று நடத்தப்பட்டது.

5. **முக்கிய சர்வதேச அரசாங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற முகவர்கள், இலங்கையின் ளிவிவகார அமைச்சுக்கள், வெளிநாடுகளில் உள்ள இலங்கை அமைச்சுக்கள் என்பவற்றுடன் உறவுகளை ஒருங்கிணைத்தல்**

- ***கற்றல் பொதுநலவாயத்துடன் விவசாயிகளுக்கான வாழ்நாள் கற்றல் செயற்றிட்டம் (COL-L3F):***

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் பொதுநலவாயக் கற்றல் என்பவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் தொடக்கப்பட்ட COL-L3F செயற்றிட்டத்தின் பாகம் 1 வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது. இது இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ஏற்றுமதி விவசாய திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு நிகழ்ச்சித்திட்டமாகும். ஆரம்ப கட்டத்தில் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ஏற்றுமதி விவசாய திணைக்களம் என்பவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் எட்டப்பட்டது. ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பங்குதாரர்களுக்கான மொபைல் அப் இற்கான உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பினை விருத்திசெய்தல் இலக்காக இருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ஏற்றுமதி விவசாய திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இச் செயற்றிட்டம் மொபைல் அப் இற்கு பொருந்தும் வகையில் பின்வரும் தலைப்புகளுக்கான உள்ளடக்கத்தினை சிங்களம் மற்றும் தமிழில் வடிவமைத்தது. இவ் ஒவ்வொரு உள்ளடக்கங்களும் அமர்விற்கு ஆகக்குறைந்தது 3 காணொலிகளை கொண்டுள்ளன. மிளகு, இலவங்கம், கொகோ, கோப்பி,கிராம்பு, ஜாதிக்காய், இஞ்சி, மஞ்சள், வனிலா மற்றும் வெற்றிலை ஆகிய 10 ஏற்றுமதி விவசாய பயிர்களின் பயிரிடல் முதல் உற்பத்தி அபிவிருத்தி வரை அனைத்து அம்சங்களும் இந் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன. சிங்களம் மற்றும் தமிழ் மொழியினைப் பயன்படுத்தி உள்ளடக்கத்தினைப் பின்பற்றலாம். மேலும் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான முக்கியமான விசேட தலைப்புக்களுடன் உள்ளடக்கம் உருவாக்கப்பட்டது.

விசேட தலைப்புகள்:

a) மண் பாதுகாப்பு
b) போசாக்கு முகாமைத்துவம்
c) நீர்ப்பாசனம் மற்றும் உரமிடல்
d) கரிம உர உற்பத்தி
e) மசாலா அடிப்படையிலான ஹோகாடன்
f) Diseases of EACs
g) Pests of EACs
h) அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம்
   1. முதன்மை உற்பத்திகள்
   2. பெறுமதிசேர் உற்பத்திகள்
   3. களஞ்சியப்படுத்தல்
   4. பொதியிடல்
   5. செயலாக்கல் இயந்திரங்கள்
   6. ஏற்றுமதி நடைமுறை
   7. சான்றிதழ் மற்றும் தரப்படுத்தல்
   8. சந்தைப்படுத்தல்
   9. ஏற்றுமதி சந்தை

விலைமனு ஆவணத்தினை தயாரிப்பதற்கும் மொபைல் அப் டெவெலெப்பர் இனை தெரிவுசெய்தவற்கும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டது. மென்பொருள் தேவை விபரக்குறிப்பு தயாரிக்கப்பட்டது. அப் இன் சிமூலேட்டர் உம் உருவாக்கப்பட்டது

6. வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் பங்குடைமையியினை ஊக்குவித்தல்

- **சர்வதேச உறவுகள் அலகினால் வசதிப்படுத்தப்பட்ட வெளிநாட்டு ஆராய்ச்சி மாணவர்கள் -2022**

தொடர்.எண்	நாடு	மாணவர்கள்	ஆராய்ச்சித் தலைப்பு	இணைந்த நிறுவனம்
01	பெல்ஜியம்	செல்வி பெசா சானிங்க	சமூக ஒழுங்கமைப்பொன்றின் தேவைகளுக்கு பொருந்தக்கூடிய வலுவான மனித வள கட்டமைப்பு ஒன்றை விருத்திசெய்வது எவ்வாறு	லூவன் லிம்பேர்க் பல்கலைக்கழக கல்லூரி
02	பெல்ஜியம்	செல்வி ஹனே மரிசி மார்க் மீர்ஸ்மன்	நீர்கொழும்பில் சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்றின் நிலைபேண் தன்மையை	லூவன் லிம்பேர்க் பல்கலைக்கழக கல்லூரி

			விருத்திசெய்தல் மற்றும் சோதனைசெய்தல்	
03	பெல்ஜியம்	செல்வி றொபினே வான் ஜெனெஷ்டன்	ஹவுஸ் ஒப் லைட் இன் சிறுவர்களுக்கான தற்போதைய சமூக காரணியாக வறுமை	லூவன் லிம்பேர்க் பல்கலைக்கழக கல்லூரி
04	பெல்ஜியம்	செல்வி சீன் வோபஸ் டீ ப்ரூக்	மொரவக்க இல் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களில் தொடர்புள்ள சுகாதார பிரச்சினைகளின் சமூக சூழல்	லூவன் லிம்பேர்க் பல்கலைக்கழக கல்லூரி
05	பெல்ஜியம்	செல்வி சோவி க்லோவாட்	சமூக அபிவிருத்தி வேலையில் பெண்களின் வகிபாகம்	லூவன் லிம்பேர்க் பல்கலைக்கழக கல்லூரி

Travel to Farm program: டென்மார்க் இல் Travel to Farm மூலம் 2022 டிசம்பர் ஆரம்பத்தில் 2023 இன் ஆரம்ப பகுதியில் இருந்து வேலைவாய்ப்புக்களின் கிடைப்பனவு குறித்து சர்வதேச உறவுகள் அலகிற்கு தெரியப்படுத்தப்பட்டது. சர்வதேச உறவுகள் அலகு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் Travel to Farm நிகழ்ச்சித்திட்டத்தினை விளம்பரப்படுத்தியது. அதனால் இவ் ஆண்டில் பைலட் அளவொன்றில் அது நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்தியது. மாணவரை தெரிவுசெய்வதற்கான நேர்முகத்தேர்வு ஒன்று நடத்தப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள; https://ou.ac.lk/activities/#1647581037626-2fa30b6d-20cd.

திறந்த கல்விவள அமைப்பு: கலாநிதி வைனி மக்கின்ரோஷ் திறந்த கல்விசார் வளங்களில் யுனெஸ்கோ தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர், திறந்த கல்விசார் வளங்கள் அமைப்பக லிமிற்றட், துணைவேந்தர் / இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பேராசிரியர் சிரோனிகா கருணாநாயக்க, பேராசிரியர் பீ.யீ ஜயதிலக்க மற்றும் பணிப்பாளர் சர்வதேச உறவுகள் அலகு ஆகியோரின் பங்குபற்றுகையுடன் 02 நவம்பர் 2022 அன்று இரு நிறுவனங்களுக்கு இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை எட்டிய பின்னர் இம் முதலாவது கூட்டம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்வதற்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும் வளங்களை பயன்படுத்துவதற்கான வழிகளை ஆராய்ந்தது.



எசெக்ஸ் பல்கலைக்கழக குழுவின் விஜயம்



லூவன் லிம்பேர்க் பல்கலைக்கழக கல்லூரி வருகை ஆராய்ச்சி மாணவர்களின் 6 வது தொகுதியினரின் பதிவு மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக ஆராய்ச்சி மேற்பார்வையாளர்களுடனான சந்திப்பு

6.8 தொழில் தொடர்பு மையம் (ILC)

1. அறிவுசார் சொத்து (IP) பாதுகாப்பு

2022 ஆம் ஆண்டில், தொழில் தொடர்பு நிலையமானது கீழ்வரும் காப்புரிமை விண்ணப்பப்படிவங்களை கோவைப்படுத்தல் மற்றும் திருத்துதலுக்காக ஆதரவளித்துள்ளது

அட்டவணை 0-1 IP Protections இன் சுருக்கம்

இல	தலைப்பு	இல		
		கோவைப்படுத்தப்பட்டுள்ளது	திருத்தப்பட்டுள்ளது	அனுமதியளிக்கப்பட்டுள்ளது
கோவைப்படுத்தப்பட்டுள்ளது				
1	An electro stimulation method for producing Agarwood by *Gyrinops walla* cell culture	✓	✓	
2	A method of producing Agarwood by *Gyrinops walla* tissue culture	✓	✓	
3	An electro stimulation method for producing Agarwood by *Gyrinops walla* tissue culture	✓	✓	
4	A method of producing Agarwood by *Gyrinops walla* cell culture	✓	✓	
5	Rechargeable bio-battery made using pith of plants as electrolytic media	✓		✓
6	A system for quick assessment of soil Nitrogen, Phosphorus, Potassium and Organic Matter for facilitating recommendation of right amount of fertilizer for agricultural lands	✓	✓	
7	Computer Numerical Controlled wood carving machine for vertical and horizontal operations.	✓		
8	Fully automated, Self-Controlled Ornamental Orchid Pot with Modular Units of assembly	✓	✓	
9	Method for processing of green pepper - based sauce as a spicy food supplement free of discoloration off flavor and preservatives	✓		

2. வணிகமயமாக்கல் செயற்பாடுகள்

தொழில் தொடர்பு நிலையம் 2022 ஆம் ஆண்டில் தொழில் நிலையங்களுடன் பின்வரும் வணிகமயமாக்கல் செயறபாடுகளை ஆரம்பித்திருந்தது.

அட்டவணை 6-2 வணிகமயமாக்கல் செயற்பாடுகள்

கண்டுபிடிப்பு	கண்டுபிடிப்பாளர்	வணிகமயமாக்கல் பங்குதாரர்	தற்போதைய நிலை
பழ தோல்	கலாநிதி நிம்ஹா வீரக்கொடி	தினு உற்பத்திகள்	வெளிப்படுத்தப்படாத ஒப்பந்தம்
பழ தோல்	கலாநிதி. நிம்ஷா வீரக்கொடி	கிரோதெக் சந்தைப்படுத்தல்	பேரவை அனுமதி இன்னும் கிடைக்கப்பெறவில்லை
Gameshow Buzzer முறைமை	Neo-Space lab, Dept physics	ரெலிமக் பிறைவட் லிமட்டட்	பேரவை அனுமதி இன்னும் கிடைக்கப்பெறவில்லை
ஸ்டிக்கர் லேபிள் இணைக்கும் இயந்திரம்	Neo-Space lab, பௌதீகவியல் துறை	ரெலிமக் பிறைவட் லிமட்டட்	பேரவை அனுமதி இன்னும் கிடைக்கப்பெறவில்லை

3. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

சமூகத்திற்கு பயன்மிக்க உற்பத்திகள் மற்றும் சேவைகளாக மாற்றப்படக்கூடிய மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு நன்மையளிக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பவற்றினை ஏற்படுத்தக்கூடிய புத்தாக்க ஆராய்ச்சி விளைவுகளை

3.1 பழங்கள் மற்றும் பழ சீவல்கள்

பழ சீவல்கள் தயாரிக்கப்படுவது இயற்கை பழச்சாற்றுடன் சமைக்கப்பட்ட, ஒட்டாத மேற்பரப்பில் உலர்ந்த சுற்றப்பட்ட கலவைகளால் ஆகும். முதலில் பல பழச் சீவர்கள் 'குசரவை குடயிள' என பேரவைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. பழச் சீவல்கள் உற்பத்தி 100மூ இயற்கையானதுடன் பதப்படுத்தும் பொருட்கள் எதுவும்

உள்ளடங்கப்படவில்லை. இந்த முறைமையில் புளியம்பழம், காமரங்காய், பிலிஞ்சை, லொவி ஆகிய பழங்களை பாதுகாப்பதற்கான பயனுள்ள முறைகளுள் ஒன்றாகும். இது சந்தையில் காணப்படும் செயற்கையான இனிப்பூட்டிகளுக்கு பதிலாக பயன்படுத்தக்கூடியதொன்றாகும்.



உரு 0-3 Fruit Flaps



உரு 0-2 Fruit slices

3.2 CEJLON பச்சை மிளகு மற்றும் பூண்டு சாஸ்

'வாசனைத் திரவியங்களின்' அரசனாக மிளகு கருதப்படுவதுடன் உலகின் மிக முக்கியமான வாசனைத் திரவியங்களில் ஒன்றாகும். 'சிலோன் மிளகு' இல் அதிகளவிலான 'பைபரின்' இருப்பதனால் அது உயர் ரக வாசனையுடன் சுவையும் கொண்டது. இந்த உற்பத்தியை சுத்தமான மற்றும் புதிய இலங்கையின் மிளகு மற்றும் வெள்ளைப்பூண்டினால் தயாரிக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் கற்கைகள் மற்றும் நிலைபேன் மத்திய நிலையத்தின் பேராசிரியர். சமீலா டயஸ் மூலம் செயற்திட்டம் முன்வைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.





உரு 0-4 Green pepper ketchup



உரு 0-5 Cereal bar

3.3 காலை உணவு தானிய பார்

காலைச் சாப்பாட்டிற்கு தானிய பெட்டிக்கு பதிலாக தொழில் மேம்பாட்டு நிலையம் மூலம் தானிய உணவு பார் ஆக மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த தானிய உணவு பார் ஆனது 100% இயற்கையானதுடன் பதப்படுத்தும் பொருட்கள் எதுவும் உள்ளடங்கப்படவில்லை. ஆரோக்கியமானதுடன் சிற்றுண்டிகளுக்கு பதிலாகவும், உடற்பயிற்சி மேற்கொள்ளவதற்கு முன்னர் உடனடி போசணையைப் பெற்றுக் கொள்ளும் உணவாக அல்லது சாப்பாட்டு வேளையில் பதில் உணவாகவும் தானிய பார் பயன்படுத்த முடியும்.

3.4 லாவுலு ஐஸ்கிரீம்

தொழில்சார் தொடர்பாடல் மத்திய நிலையம் மூலம் சுற்றாடல் கல்வி மற்றும் நிலைபேண் நிலையத்தின் பேராசிரியர். சமீலா டயசின் மதிப்பீட்டின் கீழ் லாவலு ஐஸ்கிரீம் உற்பத்தியை மேம்படுத்தல்.





உரு. 0-6 **லாவுலு ஐஸ்கிரீம்**

3.5 காளான் வளர்ப்பு அறை

இது தொடர்பாக ஆர்வம் காட்டுகின்றவர்களுடன் சேர்ந்து காளான் வளர்க்கும் கூடாரங்களை வணிக மயப்படுத்தும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. உயர் தரத்திலான காளான்களுக்கான சந்தையில் இருக்கும் கேள்வியை நிரப்புவதற்கான உயர் தரத்திலான காளான்களை வளர்க்கும் கூடாரம் ஒன்றை அமைத்தல் தொடர்பாக கலந்துரையாடல்.

3.6 Gameshow Buzzer முறைமை

சமகால சந்தையில் மிகவும் நெகிழ்வான மற்றும் நம்பிக்கையான பயஅந ளாழற டிரணணநச ளலளவநஅ இதுவாகும். புயன்பாட்டாளரால் பொத்தானை அமுத்தும் போது இதிலிருந்து ஒரு வெளிச்சம் வெளியாகும்.




Figure 0-7 Gameshow buzzer

3.7 ஸ்டிக்கர் லேபிள் இணைக்கும் இயந்திரம்

தொழில்சார தொடர்பாடல் மத்திய நிலையம் மூலம் சிலின்டர் கிளாஸ மற்றும் ீநுவு போத்தல்களில் ஸடிக்ர் மற்றும் லேபல் விற்பனை இயந்திரமொன்றை மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் சாதாரணமாக செயற்படுத்தப்படும் முதல் போத்தலை மீது லேபல் ஒட்டுவதாகும்.தேவைக்கு ஏற்ப லேபல்களை அச்சிடல் மற்றும் வெட்டுதல், ஒரே போத்தலில் இரண்டு லேபல்கள் ஒட்டும் திறன் ஆகியவைகளை இது கொண்டுள்ளது. விற்பனைக்காக லேபல் பண்ணுதல் மற்றும் அறிமுகப்படுத்தலுக்காக போத்தல் மற்றும் லேபல் கைத்தொழில்களுக்குள் பரவலாக பயன்படுத்தப்படுகின்றது.



உரு 0-8 **ஸ்டிக்கர் லேபிள் இணைக்கும் இயந்திரம்**

பின்வரும் அட்டவணைகள் திட்டங்களின் பல்வேறு நிலைகளை சுருக்கமாகக் கூறுகின்றன

அட்டவணை 0-2 அபிவிருத்தி செய்யப்படும் திட்டங்கள்

ஆய்வு முடிவுகள்	பீடம்	நிலை		
		முன்மொழியப் பட்டவை	விருத்திசெய் யப்பட்டவை	வுணிகப்படுத்தப்பட் டவை
பழச் சீவல் உற்பத்தி	பொறியியல்	✓	✓	
ஊநுதுடுழுே பச்சை மிளகு மற்றும் இஞ்சி சோஸ்	சுற்றாடல் நிலைபேண் நிலையம்	✓	✓	
காலை உணவிற்கான ஊநசநயட டியச	தொழில் தொடர்பு நிலையம்	✓	✓	
டுயறரடர ஐஸ்கிரீம்	சுற்றாடல் நிலைபேண் நிலையம்	✓	✓	
காளான்	இயற்கை விஞ்ஞானங்கள்	✓		
டீ டீரணணநச ளலளவநஅ	இயற்கை விஞ்ஞானங்கள்	✓	✓	
யுபயசறழழன	இயற்கை விஞ்ஞானங்கள்	✓	✓	
வளர்ப்பு ஸ்டிக்கர் மற்றும் இயந்திரம்	இயற்கை விஞ்ஞானங்கள்	✓	✓	✓

அட்டவணை 0-3 ஆரம்ப கட்டத்தில் உள்ள திட்டங்கள்

திட்டம்	பீடம்
வாழை நார் சானிட்டரி டவல்	சுற்றுச்சூழல் நிலைபேண் தன்மைக்கான மையம்
வாழை நார் தேநீர் பைகள்	சுற்றுச்சூழல் நிலைபேண் தன்மைக்கான மையம்

4.0 கூட்டுப்பணி

பின்வரும் அட்டவணைகள் மற்ற நிறுவனங்களுடன் உருவாக்கப்பட்ட கூட்டுப்பணிகளையும் இணைப்புகளையும் காட்டுகின்றன

4.1 உள் பங்குதாரர்களுடன் கூட்டுப்பணி

	செயற்திட்டம்	விபரம்
1.	Agarwood செயற்திட்டம்	Agarwood பசையை வணிகமயப்படுத்துவது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை பங்குதாரர்களுடன் கலந்துலையாடுவது பற்றிய ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கூட்டமொன்றை தொழில்சார் அபிவிருத்தி மையம் மேற்கொண்டது. பல்வேறு தரப்பினருடன் கரந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளது.
2.	Banana குடிநச செயற்திட்டம்	திட்டக் குழு உறுப்பினர்களுடன் வாழை நார் திட்டத்திற்காக ஐடுஊ பல ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கூட்டங்களை நடத்துகிறது. கலாநிதி அஜித் மதுரப்பெரும, ஜவுளி மற்றும் ஆடைத் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் அன்பழகன் அரியதுரை, ஜவுளி மற்றும் ஆடைத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எரிக் பெரேரா, ஜவுளி மற்றும் ஆடைத் துறைத் தலைவர் கலாநிதி திலினி விஜேரத்ன ஆகியோருடன் பல சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆடை, கலாநிதி சமிலா டயஸ் சிரேஷ்ட விரிவுரையாளர், ஊநுளுளுனு, திருமதி. சுபாஷினி பாலச்சந்திரன் உதவி. தொழில்நுட்பவியலாளர்-SLITA, திருமதி. பியாலி டயஸ் முகாமையாளர் /ILC, திருமதி தனுஷ்கா பாலகுரு திட்ட அபிவிருத்தி முகாமையாளர் /ILC..

4.2 வெளி நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு

	கூட்டுப்பணியாள்	விபரம்
1	Ceylona Green Natural Food (Pvt) Ltd	தொழில் தொடர்பு மையம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மூலம் தொழில்துறையை ஆதரிக்கிறது, Celona green spicy (Pvt) Ltd அவர்கள் எதிர்கொள்ளும் தொழில்துறை சிக்கல்களுக்கு உதவ தொழில் தொடர்பு மையத்தை கோரியது. குறிப்பிட்ட தேவைகளை கண்டறிந்து பிரச்சனைகளை தீர்க்க பல கூட்டங்கள் நடத்தப்பட்டன.
2	Arpico Super Centre	"சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கு" சாத்தியமுள்ள தயாரிப்புக்காக ஆர்பிகோ சூப்பர் சென்டரை ஐடுஊ அணுகியது. ஆர்பிகோ சுப்பர் சென்டருடன் திரு.மாதவா, ஆர்பிகோ சுப்பர் சென்டர், டாக்டர்.சமிலா டயஸ், டாக்டர்.கயான் இல்லேபெரும, திருமதி.பியாலி மற்றும் செல்வி தனுஷ்கா ஆகியோருடன் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. ஒத்துழைப்புக்கான சாத்தியமான பகுதிகள் விவாதிக்கப்பட்டன.
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசெயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி பொழிப்புக் கூற்று மற்றும் நிதி வெளிப்பாடுகளுக்குரிய குறிப்புகள் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிவெளிப்பாடுகள் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154(1) யாப்புடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் உறுப்புரைகளுக்கு ஏற்ப என்னுடைய பணிப்பின் கீழ் அவதானமாக கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியல் யாப்பின் 154(6) யாப்பிற்கமைவாக என்னுடைய அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றசபையில் சமர்ப்பிக்கப்படும்.

பல்கலைக்கழகத்தில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிநிலமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசெயலாற்றல்கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் இலங்கை அரச பிரிவினரின் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப உண்மையாகவும் நேர்மையாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) திறந்த பல்கலைக்கழகத்தின் 02 கட்டடிடங்களுக்கு மின்சார வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மின்சார சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா.4,098,592 இலங்கை அரச பிரிவினரின் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப இன் 22 ஆவது பந்திற்கு அமைய கட்டிடங்களின் கீழ் கணக்கிடப்படாமல் வருடத்தின் செலவாக குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தினால் கட்டிடங்களின் பெறுமதி மற்றும் வருடத்தின் உபரியானது குறிப்பிட்ட அளவிலிருந்து குறைவாகவோ அல்லது அதிகமாகவோ குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) தவணை முறையில் கிடைக்கப்பெறும் கற்கைநெறி வருமானது வருடத்திற்கு ஏற்ப அறிமுகப்படுத்தும் அடிப்படையானது இலங்கை அரச பிரிவினரின் கணக்காய்வு நியமம் 10 இன் 39 ஆவது பந்திற்கு ஏற்ப வெளிப்படுத்தப்படாமல் இருக்கும் காரணத்தினால் 2022 செப்டம்பர் முதல் 2022 டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கு அமவாக 18 கற்கைநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தில் ரூபா.70,057,777 மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் வருமானமாக ரூபா.165,437,666 முன்னர் பெறப்பட்ட வருமானமாக கணக்கில் பதியப்பட்டிருந்தாலும் அதன் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

(இ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 2022 ஆம் ஆண்டில் உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாடு செயற்திட்டத்தின் (AHEAD) கட்டிடங்களை புனர்நிர்மானம் செய்வதற்காகவும் நிலையான சொத்துக்களை வாங்குவதற்காகவும் கிடைக்கப்பெற்ற மொத்த தொகை ரூபா.1,919,830 மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் செலவுகளுக்கு கிடைக்கப்பெற்ற மொத்தம் ரூபா.37,582,783 கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கை அரச பிரிவினரின் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப 11 நிதி செயலாற்றுகை அறிக்கைகளை தயார் செய்யும் போது 2021 டிசம்பர் 31 ஆம் திகதி இடம்பெற்ற செலவளிக்கப்பட்ட மூலதன மானியம் ரூபா.392,547,770 தொகை அறவிடப்படாத மூலதன மானியம் ரூபா.24,789,318 தொகை மற்றும் அன்பளிப்பு மற்றும் ஏனைய பெறுகைகள் ரூபா.623,653,404 ஆகியவற்றின் மொத்தம் ரூபா.1,040,990,492 மூலதனம்

திரட்டப்பட்ட நிதியத்திற்கு ரூபா.262,678,203 மற்றும் திரட்டப்பட்ட சுழற்சி நிதியத்திற்கு ரூபா.267,960,710 மாற்றும் போது ஜர்னல் உள்ளீடுகள் மற்றும் பேரேட்டில் பதியப்படாமல் உள்ளது.

(உ) கடந்த வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதிற்கு மொத்தம் ரூபா.30,282,945 ஆகின்ற மேலதிக செலவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செலவுகளைக் குறைத்து காட்டப்பட்டுள்ளதனால் வருடத்தின் செலவுகள் குறைவாக காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய வருடத்தின் மிகுதி கணக்கில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய வருடத்தின் மிகுதி குறிப்பிட்ட தொகையை விட அதிகமாக நிதிக்கூற்றுக்களில் பதியப்பட்டுள்ளது.

(ஊ) மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டில் கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் வருமானத்தை சரியாக இனங்காணமல் மாணவர் வருமானக் கணக்கின் தொகை மற்றும் இனங்காணப்படாத மாணவர் வருமானக் கணக்கிற்கு இடையில் ரூபா.760,779,170 வேறுபடுகின்ற கிடைக்க வேண்டிய மாணவர் வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளதுடன் அதன் காலப்பகுதியும் குறிப்பிடப்படவில்லை.

(எ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதிப் பதிவுகளில், ரூ. 22,972,539 இன் உள்ளீடுகளைப் பதிவதில் ஏற்பட்ட பிழைகள் காரணமாக தேய்மானம் ஏற்பட்.டுள்ளது. பின்னர், திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கைகளுக்கான திருத்தும் போது ஏற்பட்ட தேய்மானம் மற்றும் தேய்மான ஒதுக்கீடு வேறுபாடுகள் காரணமா தொகை ரூ. 45,914,112. மிகைப்படுத்தப்பட்டு பதியப்பட்டுள்ளது.

(எ) செலுத்துகை பற்றுச்சீட்டுகள், மற்றும் பற்றுச்சீட்டு மூல ஆவணங்களை முறைப்படுத்தாமல் தேய்மானம், தேய்மானத்தை வேறுபடுத்தல் மற்றும் சொத்துக் கணக்குகளுக்கு கணனி மூலம் பதியப்பட்டிருந்தது. அவ்வாறான குறிப்புக்களால் பதியப்பட்ட தவறான பதிவுகளை சரிப்படுத்துவதற்கு வருட இறுதியில் ஜர்னல் குறிப்புகள் இட்டு தேய்மானம் வேறாக்கல் கணக்குகளில் இருந்து ரூபா.277,275,406 நீக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செலவு ரூபா.5,408,784 ஆகின்ற தொட்டுணர முடியாத சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் தேய்மானம் கணக்கிடப்படவில்லை.

(உ) பிராந்திய மற்றும் கற்கை நிலையங்கள் 08 இனது மற்றும் நாவல பிரதான நூலகத்தில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி காணப்பட்ட தேறிய மிகுதியானது ரூபா.208,381,961 மற்றும் தேறிய பெறுமதி ரூபா.44,264,590 நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் இலங்கை அரச பிரிவினரின் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப தரம் 07 இன் 42 மற்றும் 43 பந்தியிற்கு புறம்பாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதி ரூபா.325,093,568 பெறுமதி கணக்கிடப்பட்டு மிகுதியாக ரூபா.280,829,078 கணக்கிடப்பட்டுள்ளது

(ஊ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிதி வெளிப்பாடுகளுக்கு ஏற்ப அரச அச்சு திணைக்களத்திற்கு ஆக்கில கற்கைகள் தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவகம் மூலம் செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூபா.2,021,1132 ஆக இருப்பினும் அந்நிறுவனங்களின் நிதி வெளிப்பாடுகளுக்கு ஏற்ப தொகையானது ரூபா.4,013,523 ஆயினும் ரூபா.1,992,410 இனது வேறுபாடு காணப்படுகின்றது.

(ஊ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிதி வெளிப்பாடுகளுக்கு ஏற்ப 25 பிராந்திய நிலையங்கள் மற்றும் வரையும் அலகுகளைக் கொண்ட பிரிவு உற்பட செலவு ரூபா.47,666,626 ஆகின்ற கற்கைநெறி புத்தகங்கள், பரீசீலிக்கப்படாமல் இருந்ததன் காரணமாக அதன் இருப்பு மற்றும் உண்மை நிலையை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டுள்ளேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள், இவ்வறிக்கையின் நிதிவெளிப்பாடுகள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வு பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயம் தொடர்பான அடிப்படையை வழங்குதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சிகள் போதுமானவை எனவும் பொருத்தமானவை எனவும் நம்புகின்றேன்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கைக்கு முன்னதாக நான் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆனால் நிதி வெளிப்பாடுகளில் மற்றும் அதனுடன் தொடர்புடைய எனது கணக்காய்வறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருள்படும். இவ் ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதி வெளிப்பாடுகள் தொடர்பான எனது கருத்துக்கள் ஏனைய தகவல் பற்றி விளக்கமளிக்காமல் இருப்பதுடன் அது தொடர்பாக நான் எந்தவொரு சான்று அல்லது கருத்து தெரியப்படுத்தவில்லை.

நிதி வெளிப்பாடுகள் தொடர்பான எனது கணக்காய்விற்கு அமைவாக, என்னுடைய பொறுப்பாக அமைவது மேலே இனங்கண்ட ஏனைய தகவல்களை வாசிப்பது மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதி வெளிப்பாடுகளுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு ஏதாவது வகையில் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு ஏற்றவகையில் பொருத்தமானதாக அமைகின்றதா எனக் கவனிப்பதாகும்.

இக்கணக்காய்வு அறிக்கையின் தினத்திற்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களுக்கு ஏற்பவும், நான் மேற்கொண்ட செயற்பாடுகளின் அடிப்படையிலும், இவ் ஆமலதிக தகவல்கள் போதியளவில் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளன என முடிவு செய்தால், அவ் விடயங்கள் தொடர்பாக என்னால் அறிக்கையிடப்படல் வேண்டும். அது தொடர்பாக அறிக்கையிடுவதற்கு எனக்கு ஏதும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தினரின் பொறுப்பு

இந் நிதி வெளிப்பாடுகள் இலங்கை அரச பிரிவின் கணக்காய்வு தரத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தல், நியாயமாக முன்வைத்தல், மற்றும் மோசடி அல்லது தவறான காரணம் ஏற்படக்கூடிய போதுமான அளவிலான துல்லியமான வெளியீடுகள் அல்லாமல் நிதிவெளியீடுகளை ஒழுங்குபடுத்த முடியுமானவாறு தேவைப்படுகின்ற உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிவெளிப்பாடுகளை ஒழுங்குபடுத்தும் போது, பல்கலைக்கழகத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் தகைமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு முகாமைத்துவம் யோசிப்பதாயின் தொடர்ச்சியான நடைமுறையின் ஸ்தீரத்தன்மையின் அடிப்படையில் கணக்குவைத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான நடாத்துகைக்கு தேவையான காரணங்களை இணங்கானல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடும் செயற்பாடு சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கும் தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் என்னுடைய அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதுமே எனது நோக்கமாகும். சாதாரணமாக சான்றளித்தல் என்பது உயர் மட்ட சான்றளித்தல் ஆகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு தரத்திற்கு ஏற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்படும் போது, அது எப்போதும் போதியளவு அசத்திய வெளியீடுகளை உள்வாங்கிக் கொள்கின்றது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. மோசடி மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கம் செலுத்துவதால் போதியளவு அசத்திய வெளியீடுகள் இடம் பெறுவதுடன், இந்நிதிய வெளிப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பரிசோதகர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் தீர்மானம் மற்றும் தொழில்சார் நம்பிக்கையின்மையுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. என் மூலம் மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதி வெளிப்பாடுகளில் ஏற்படக்கூய அசத்திய வெளியீட்டு அவதானங்களை அடையாளம் காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உரிய கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகளையும் தவறுகள் மூலம் ஏற்படும் அவதானங்களை இல்லாதொழிப்பதற்கும், போதியளவு மற்றும் தகுதியான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக் கொள்வது என்னுடைய அபிப்பிராயம் ஆகும். அசத்திய வெளியீடுகளினால் ஏற்படும் தாக்கத்தை விட மோசடியால் ஏற்படும் தாக்கம் கடுமையானதுடன், கூட்டுசதி, போலி ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று தவறவிடல் அல்லது உள்ளக நிருவாகத்தினால் தவறவிடல் போன்றன மோசடிகள் ஏற்படுவதற்கான காரணம் ஆகும்.
- சந்தர்ப்பங்களுக்கு உரிய கணக்காய்வு நடைமுறையை செயற்படுத்தும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக நிருவாகம் தொடர்பாக புரிந்துணர்வைக் பெற்றுக் கொண்டிருப்பினும், உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயத்தை தெரியப்படுத்துவதற்கு திட்டமில்லை.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவம் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைவு வெளிக்கொணர்தலின் சாதகத்தன்மையை மதிப்பிட்டுள்ளது.
- சம்பவங்கள் அல்லது நிலமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலமைகள் தொடர்பான அசத்திய வெளியீடுகள் காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொண்ட கணக்காய்வு சாட்சியின் அடிப்படையில் கணக்காய்விற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான ஸ்தீரத்தன்மை தொடர்பாக அறக்கட்டளை வழங்குவது தீர்மானிக்கப்பட்டது. அசத்திய வெளியீடுகள் உள்ளதாக நான் தீர்மானித்து விட்டால் நிதி வெளிப்பாடுகளில் அது தொடர்பான வெளிக்கொணர்வுகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் அவதானம் செலுத்த வேண்டியதுடன் அவ்வெளிக்கொணர்வுகள் போதுமானதாக இல்லாவிடின் என்னுடைய அபிப்பிராயம் திருத்தப்படல் வேண்டும். எது எவ்வாறாயினும்,எதிர்கால

சம்பவங்கள் அல்லது நிலமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடையக்கூடும்.

- வெளிக்கொணர்வுகளை உள்ளடக்கிய நிதிவெளிப்பாடுகளின் முன்வைப்பு, வியூகம் மற்றும் உள்ளடக்கம் போன்றவற்றை கணித்ததுடன் அவற்றிற்கு காரணமாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உரிய மற்றும் நியாயமாக நிதிவெளிப்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

என்னுடைய கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிருவாகக் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கின்ற பிரிவினர் அறியப்படுத்தப்பட்டுள்ளனர்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட மானியங்கள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப, கணக்காய்விற்கு தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது அவதானத்தின் படி உரிய நிதிவெளிப்பாடுகளை பல்கலைக்கழகம் நடாத்திச் சென்றுள்ளது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) ஆ (iii) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப பல்கலைக்கழகம் சமரப்பித்துள்ள நிதிவெளிப்பாடுகள் கடந்த வருடத்துடன் இசைந்து செல்கின்றது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) ஆ (iv) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப கடந்த வருடம் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நிதிவெளிப்பாடுகளில் இடம் பெற்றுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட வழிமுறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில், மற்றும் போதியளவு காரணங்களுக்கு வரையறுத்தல், கீழ்வருவனவற்றை குறிப்பிடும் அளவிற்கு ஏதும் என்னுடைய அவதானத்திற்கு வரவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஆ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப பல்கலைக்கழக நிர்வாக உறுப்பினர் ஒருவருக்கு பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு உடன்படிக்கை தொடர்பாக நேரடியாக அல்லது வேறு ஏதாவது வகையில் சாதாரண வியாபார நிலமைகளில் இருந்து அன்னியமான தொடர்பு உள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப கீழ்வரும் அவதானங்கள் அல்லாமல் ஏதாவது உரிய எழுத்து மூல சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழக நிர்வாகம் மூலம் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு ஏற்பற்றதாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

சட்டங்கள் / விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு	விபரம்
(அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம்	

(i)	நிதிப்பிரமமாணங்கள் 102,103,104, மற்றும் 2016 பெப்ரவரி 12 ஆம் திகதியுடைய 02/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை	2018 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையிலான மொத்தம் ரூபா.31,072,291 ஆகின்ற சேதமாகிய கற்கைநெறி புத்தகங்கள் களஞ்சிய அறையின் அனுமதியின்றி பல்கலைக்கழக நிர்வாகக்குழு மூலம் அகற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது
(ii)	நிதிப்பிரமாணங்கள் 113(3)(ஆ)	நிறுவனத்தின் கொள்கைக்கு ஏற்ப மீள்பதிவு செய்யாமல் 05 வருடங்களை மிஞ்சிய கிடைக்க வேண்டிய ரூபா.10,516,756 திறைசேரியின் அனுமதியின்றி குறிப்பிட்ட ஆண்டில் நீக்கியிருந்ததுடன் 2014 ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் நீக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா.392 ,551.000 ஆகும்.
(iii)	1978 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 11(அ) பந்தி	உரிய அமைச்சரின் மற்றும் நிதி தொடர்பான அமைச்சரின் முன் அனுமதியினைப் பெறாமல் பல்கலைக்கழகம் மூலம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா.1,516,407,982 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.
iv. 2022 ஏப்ரல் 26 ஆம் திகதியுடைய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை மற்றும் 2023 ஜனவரி 18 ஆம் திகதியுடைய இலக்கம் BD/HRD/126/214/19/2023 ஆம் இலக்க திறைசேறி செயலாளரின் கடிதம்	i.	கல்விசார் நடவடிக்கைகளுக்காக மற்றும்….. வருடாந்த விடுமுறையில் வெளிநாட்டிற்கு செல்லும் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான விமான டிக்கட் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கு தேசிய திறைசேறியை பயன்படுத்தக்கூடாது என்பதுடன் 2022 ஏப்ரல் 26 முதல் 20230மார்ச் 31 வரையில் .. விடுமுறையில் வெளிநாடு சென்ற கலாநிதிகள் 04 பேர்களுக்கும் அவர்களது துணைவர்களுக்கும் தேசிய திறைசேரியிலிருந்து ரூபா.435,500 பிணைமுறி மற்றும் உடன்படிக்கைகளை மீறல்களினால் கிடைக்கப்பபெற்ற ரூபா.1,466,300 விமான டிக்கட் மற்றும் ஆடைகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.
	ii.	பிணைமுறி மற்றும் உடன்படிக்கைகளை மீறல் காரணமாக அறவிடப்பட்ட பணம் வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் இருப்பின் அரச வருமானங்களில் வைப்புச் செய்யப்பட வேண்டியதுடன் குறிப்பிட்ட நிதியாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா19,007,654 பல்கலைக்கழக வருமானமாகவும் அதற்கு முன்னைய வருடங்களில் கிடைக்கப்பெற்ற ரூபா.133,497,387 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

ஈ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் V பந்தியின் உறுப்புரை 7.6	1989 ஆம்ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் பிணைமுறை உடன்படிக்கைகளை மீறிய உத்தியோகத்தர்கள் 31 பேர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா.58,298,333 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் தவறியுள்ளது.
உ. 1978 டிசம்பர் 19 ஆம் திகதியுடைய 842 ஆம் இலக்க திறைசேறி சுற்றறிக்கை	2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சொத்து, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா.12,744,012 ஆகின்ற தொட்டுணர முடியாத சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்து ஏட்டில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை.
ஊ. அரச பெறுகை வழிகாட்டல்கள் சுற்றறிக்கையின் 5.4.11 பந்தி.	கூட்டிய மொத்த பெறுமானத்தின் அடிப்படையில் வரி இன்வொயிஸ் கிடைக்கப்பெற்றதன் பின்னர் வழங்குனர் செலுத்த வேண்டியதுடன், வரி இன்வொயிஸ் பெற்றுக் கொள்ளாமல் 2018 ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட ஆண்டின் இறுதி வரை மொத்தம் ரூபா.10,088,143 வரிப்பணத்தை தடுத்து வைத்திருந்தனர்.
2021 நவம்பர் 16 ஆம் திகதியுடைய மற்றும் Operational Manual (01/2021) ஆம் இலக்க அரச செயற்திட்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி	கற்கைநெறி நேரசூசி தொடர்பாக மற்றும் பல்கலைக்கழகத்தின் சகல பிரிவினதும் செயற்பாடுகள் உள்ளடங்களாக 2022 ஆம் ஆண்டின் செயற்பாட்டு திட்டமிடல் முறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் வினைதிறனை பரிசீலனை செய்வதற்காக 2020,2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டு திட்டமிடல் முன்னேற்ற அறிக்கை திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பல்கலைக்கலகத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்பற்றதாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுசட்டத்தின் 12 (ஊ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பல்கலைக்கலகத்தின் வளதிட்டமிடுபவர்களாக, வினைதிறன் மற்றும் விளைதிறன் உடையதாக உரிய காலப்பகுதிக்குள் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகை மேற்கொண்டு பயன்படுத்தப்படவில்லை என.

2.3 ஏனைய அவதானங்கள்

(அ) பல்கலைக்கழகத்தின் 05 பிரிவுகளின் நடவடிக்கைகள் தொடர்பாக 05 மொடியுல்ஸ் ஆக நிறுவப்பட்டுள்ள செயல்பாட்டு முகாமைத்துவ தகவல் முறைமையில் (OMIS) காணப்படும் குறைபாடுகளுடன் தொடர்புடைய பராமரிப்பு நிறுவனங்களின் மூலம் சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் வெற்றியளிக்காததனால் 2018 ஆம் ஆண்டு முதல் புதிய உள்ளக முகாமைத்துவ தகவல் முறைமையை நிறுவுவதற்கு ரூபா.45,757,992 செலவளிக்கப்பட்டாலும் வருட முடிவின் போது புதிய உள்ளக முகாமைத்துவ தகவல் முறைமையை நிறுவுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(ஆ) திறந்த பல்கலைக்கழகம் மூலம் திறைசேறியின் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட ஊழிய காப்புறுதிக் கடன் திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையில் அரசின் பணம் ரூபா.42,192,534 இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் அரசின் நிதி ரூபா.30,000.00 மற்றும் ஊழிய பங்களிப்பு ரூபா.27,789,813 பல்கலைக்கழகத்திற்குள் நிறுவப்பட்ட செலுத்த வேண்டிய காப்புறுதிக் கணக்கின் ஊடாக உள்வாரியாக நியமிக்கப்பட்ட செயற்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஊழியக் காப்புறுதி விண்ணப்பப்படிவத்திற்காக ரூபா.57,037,256 மொத்தப் பணத்தையும் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(இ) இரத்தினரி பிராந்திய நிலையத்தில் கூரை மற்றும் வெப்பவியக்கவியல் ஆய்வுகூடத்தை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் 2022 ஆகஸ்ட், செப்டெம்பர், மற்றும் நவம்பர் மாதங்களில் ரூபா.11,272,916 இற்கு

மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நவீனமயப்படுத்தும் செயற்பாடுகளானது 2023 மே மாதம் வரையில் எந்த நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவில்லை.

(ஈ) அரச காணிகள் ஆணைச்சட்டத்தின் உறுப்புரை 6(1) இன் படி பெயரளவுக் கட்டணம் அறவிட்டு விசேட சலுகைகள் பத்திரம் ஊடாக ஹெக்டயர் 8.2965 ஆகின்ற காணி 17 காணிகளின் உரிமையை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைப்பதற்காக 2021 ஜூலை 19 ஆம் திகதி அமைச்சவரவையின் அனுமதியளிக்கப்பட்டிருந்தாலும் கணக்காய்வு தினம் 2023 மே மாதம் 08 ஆம் திகதி ஆகின்ற போதிலும் அந்த காணியின் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத போதிலும் திறந்த பல்கலைக்கழகம் உரிமம் கொண்டாடும் ஹெக்டயர் 2.4506 ஆகின்ற 05 காணிகளின் உரிமத்தை பெற்றுக் கொள்ள தவறியுள்ளனர்.

(உ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் பல்கலைக்கழக நிருவாகக் குழுவின் அனுமதியின் பேரில் ஒப்பந்த அடிப்படையில் கல்விசார் ஊழியர்களுக்கு 41 பேர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்காக 252 பேர்களுடன் நடப்பு ஆண்டில் ரூபா.100,314,372 கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளதுடன், தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் கல்விசார் ஊழியர்கள் 21 பேர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

டப்லியூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர்

10.2 கணக்காய்வாளர் அறிக்கைக்கான மறுமொழி

கணக்காய்வாளர்
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இல 306/72, பொல்துாவ வீதி
பத்தரமுல்லை

இலங்கை திறந்த பல்லைக்கழகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் நாளாந்த சட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுசட்டத்தின் 12 உறுப்புரைக்கு அமைவான கணக்காய்வாளரின் அறிக்கை.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மதிப்பிடப்பட்ட அபிப்பிராயம்

1.2 மதிப்பிடப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மின்சார சபையின் மூலம் நிறுவப்பட்ட மின் கம்பி முறையானது பல்கலைக்கழக சொத்து அல்லாததுடன் அது மின்சார சபைக்குரிய சொத்தொன்றாகும். இதனால் மின்கம்ப முறைமைக்கு செலுத்தப்படும் சேவைக்கட்டணங்கள் மீண்டுவரும் செலவாக கணக்குகளில் பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து வருடாந்தம் மாணவக் கட்டணம் அறவிடப்படுவதுடன், அது இரண்டு தவணைகள் ஊடாக மாணவர்களிடமிருந்து அறவிடப்படுகின்றது. கல்விசார் வருடம் மற்றும் கணக்கீட்டு ஆண்டுக்கிடையில் வேறுபாடு காணப்படுவதுடன் உரிய கணக்கீட்டு ஆண்டிற்குரிய வருமானம் குறிப்பிட்ட ஆண்டின் மாணவர் வருமானமாக அறியப்பட்டுள்ளதுடன் மிகுதி ஏலவே பெறப்பட்ட வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

(இ) AHEAD செயற்திட்டம் பல்கலைக்கழகத்தின் கணக்குகளுக்கு புறம்பாக வேறாக செயற்படும் செயற்திட்டமொன்றாகும். அதற்கமைய, கொடுக்கல் வாங்கல்கள் வேறாகவே வங்கிக் கணக்கொன்றின் கீழ் பேணப்படுவதுடன், அதன் கணக்குகளும் வேறு பேரேடுகளில் பேணப்படுகின்றன. எனவே AHEAD செயற்திட்டத்தின் செலவுகள் பல்கலைக்கழக கணக்குகளில் இருந்து வெளிக்காட்டல் மேற்கொள்ளப்படவில்லை என்பது கணக்குகளிலிருந்து தெளிவாகியுள்ளது

(ஈ) கணனி முறைமையில் காணப்படும் வரையறைகள் காரணமாக பொதுக் கணக்குகளுக்கு பதிலாக புதிய பேரேட்டுக் கணக்குகள் 02 ஐ திறப்பதை உடனடியாக மேற்கொள்ள முடியாது. அதற்கமைய மூலதன பொது நிதியம் உரிய சகல பொருத்தங்களும் பொது நிதியக் கணக்குகளின் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) 2021 ஆண்டுக்குரிய அட்டறு செலவுகளுக்காக செலுத்துகைகள் மேற்கொள்ளும் போது அட்டறு செலவுகள் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருப்பதை சரிப்படுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டிற்குரிய செலவுகள் கணக்கில் இருந்து குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) OMIS கணனி முறைமையில் காணப்படும் அசௌகரியங்கள் காரணமாக மாணவர் வருமானத்திற்குரிய சரியான காலப்பகுதியின் பகுப்பொன்றை பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது. நவீன கணனி முறைமையின் மூலம் அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

(எ) திருத்தப்பட்ட நிதி வெளிப்பாடுகளை முன்வைக்கின்ற சந்தர்ப்பத்தின் போது 2022 ஆம் ஆண்டில் நிதிச் செயற்பாடுகளை நிவர்த்தி செய்து கணனி முறைமையை பூட்டி இருந்தமையினால் அவை மீண்டும் 2022 ஆம் ஆண்டில் திறக்க முடியவில்லை. அதற்கமைய தேய்மானத்தை சரிப்படுத்த கணனி முறைமையின் மூலம் 2023-01-01 ஆக் திகதி மேற்கொள்ளப்பட்டது.

எனினும் மேலதிகமாக கணக்கிடப்பட்ட தேய்மான செலவுகளை சரிப்படுத்துவதற்கு குறிப்பிடப்படும் பேரேட்டுக் குறிப்பில் தவறுதலாக பதியப்பட்டுள்ளது. அதற்கமைய தேய்மானத்தை சரிப்படுத்துவதற்கு பேரேட்டுக் குறிப்பு தவறென ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அந்த பேரேட்டுக் குறிப்புகளை இரத்து செய்து JNL2023000563 மூலம் தேய்மான செலவுகளை சரிப்படுத்தி கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) OMIS கணனி முறைமையில் சொத்துக்கள் ஏடு பல வருடங்களாக சரியான முறையில் மேம்படுத்தப்படாமல் உள்ளது அவதானிக்கப்பட்டுள்ளதுடன், அந்த முறைமைக்குள் காணப்படும் வரையறைகள் காரணமாக பின்னர் அவற்றை சரிப்படுத்தவும் முடியவில்லை. அதனால் கணனி முறைமை மூலம் தேய்மானம் கணக்கிடப்படுதல் சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

அதற்கமைய கணனி முறைமை மூலம் வழங்கப்படும் தேய்மானக் கணக்கிடல் நாட்குறிப்பேட்டில் இருந்து அகற்றப்பட்டு, முறையாக கணக்கிடப்பட்ட வருடாந்த தேய்மானம் நாட்குறிப்பேட்டு குறிப்புக்கள் மூலம் கணனி முறைமைகளில் உள்வாங்குவதற்கானன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) ரூபா.5,340,344.00 ஆகின்ற E- books மற்றும் மென்பொருட்களின் (Softwares) ஆயுட்காலத்தை முன்கணிப்பு செய்ய முடியாததன் காரணமாக அச்சொத்துக்கள் நிலையற்ற ஆயட்காலத்தைக் கொண்ட தொட்டுணர முடியாத சொத்துக்கள் என்றவாறு வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ) நூலகத்தினால் 2018 ஆம் ஆண்டில் நூலக புத்தகங்கள் தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, காணமல் போன புத்தகங்களை உரிய அனுமதியைப் பெற்று ஒப்புதல் ஏட்டில் Missing என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2019 ஆம் ஆண்டில் நூலக புத்தகங்களுக்கான விலை மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டதுடன் முதலில் நூலக கொஹா முறைமையை பயன்படுத்துவதன் மூலம் உரிய நூலக புத்தகங்கள் தொகையின் தகவல்களின் பிரதியொன்று Excell Sheet இல் பெறப்பட்டது. அதன் பின்னர் கீழ்வரும் வகையில் அந்த புத்தகங்களுக்கான விலைகள் தீர்மானிக்கப்பட்டு அதை Excell Sheet இல் மேம்படுத்தப்பட்டது.

- புத்தகங்களை கொள்வனவு செய்யும் போது நூலின் பெறுமதி ஏற்பு ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவ்விலையை முதலில் பெற்றுக் கொள்ளல்.
- ஏற்பு ஏட்டில் விலை குறிப்பிடப்படாத புத்தகங்களுக்கான புத்தகத்தை பௌதீக ரீதியாகப் பெற்று அதன் விலைகளைப் பெறல்.
- மேற்கூறப்பட்ட இரண்டு வழிமுறைகளிலும் தேட முடியாமல் போகின்ற சந்தர்ப்பங்களில் இணையத்தளம் மூலம் உரிய புத்தகத்தின் விலையைத் தேடல்.
- வெளிநாட்டு நாணய அலகுகளில் விலை குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அந்த புத்தகம் பதிப்பிக்கப்பட்ட வருடத்தின் அன்னியச் செலாவணியை இலங்கை நாணயத்திற்கு மாற்றி பெறுமதியை மதிப்பிடல் வேண்டும்.
- மேற்குறிப்பிடப்பட்ட எந்த முறையிலும் விலையைத் தேட முடியாமல் போகின்ற சந்தர்ப்பங்களில் ஒரு பக்கத்தின் விலை ரூபா.2.00 ஆகக் கொண்டு உரிய புத்தகத்தின் பக்கங்களின் எண்ணிக்கையுடன் பெருக்கி விலையைக் கணித்தல் வேண்டும்.
- விலை குறிப்பிடப்படாத புத்தகங்களுக்கு சாதாரணதொரு விலையைத் தீர்மானித்தல்.
- விலை குறிப்பிடப்படாத இறுவெட்டுக்களுக்கு சாதாரண விலையொன்றை தீர்மானித்தல்.

அதற்கமைய இலங்கை அரச பிரிவினரின் கணக்கீட்டு தரத்தின் இல 07 இற்கு அமைவாக கணக்கிடப்பட்ட பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளதுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ) Zoom Business Accounts 05 இற்காக 2022-11-3 முதல் 2023-11-29 காலத்திற்கு உரிய ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் மூலம் பல்கலைக்கழகத்திற்கு பதிலாக ரூபா. 396,019.00 ஏற்கப்பட்டுள்ளது. ஆவது தொடர்பாக 2022 கணக்கீட்டு ஆண்டிற்குரிய பகுதி ரூபா.33,001.56 செலவுகள் ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பணமாக கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு காரணம் இந்த வேறுபாடாகும்.

பல்கலைக்கழகம் மூலம் அரச அச்சக திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அச்சுக் கட்டளைகளின் பெறுமதிகளின் அடிப்படையில், அரச அச்சக திணைக்களம் செலுத்த வேண்டிய தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

எனினும் அரச அச்சக திணைக்களம் எங்களால் கோரப்பட்ட கட்டளைகளுக்கு ஏற்ப அச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, அச்சிடல் செலவுகள் அதிகரித்ததினால் ஏற்பட்ட அதிக விலையேற்றமானது அவர்களால் அளிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழகதினால் கோரப்பட்ட புத்தக தொகையை விட அதிகமாக புத்தகங்களை அச்சிட்டிருந்ததுடன் அம் மேலதிக புத்தகங்களுக்கான செலவையும் அவர்களால் அளிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் சேர்க்கப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட விடயம் பல்கலைக்கழக நிதிவெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெறுமதி மற்றும அரச அச்ச திணைக்களத்தின் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளுக்கிடையிலான வேறுபாட்டிற்கான காரணம் ஆகும்.

(ஒ) பல்கலைக்கழக பிராந்திய நிலையங்களின் கற்கைநெறிப் பொருட்கள் பிராந்திய உதவிப் பணிப்பாளர்களினால் அமைக்கப்பட்ட குழுவொன்றினால் பௌதீக ரீதியாக பரிசீலிக்கப்பட்டு தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய கற்கைநெறிப் புத்தகங்கள் பரிசீலிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

சட்டதிட்டங்கள் / கட்டளைகள்			அவதானங்கள்
(அ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரதின் நிதிப் பிராமணங்களின் விதிக்கோவை		
	(i)	நிதிப் பிராமணங்கள் 102,103,104, மற்றும் 2016 பெப்ரவரி 12 ஆம் திகதியுடைய இல 02/2016 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	பல்கலைக்கழகம் மூலம் வருடாந்தம் பதிவு செய்யப்படுகின்ற மாணவர் தொகையை அடிப்படையாகக் கொண்டு வெளியீடுகள் அச்சிடப்படுகின்றன. இது பல்கலைக்கழகத்தின் சாதாரண செலவுகள் ஒன்றாகும். எனினும் கல்வி ஆண்டுகளுக்கிடையில் மாணவர்கள் கற்கைநெறியை விட்டுச் செல்லல். பாடத்திட்டத்தில் மாற்றங்கள் ஏற்படல் ஆகிய காரணங்களினால் ஏலவே அச்சிடப்பட்ட புத்தகங்களை அகற்ற வேண்டி ஏற்படுகின்றது. இது தொலைத்தொடர்பு கல்விமுறையினைப் பின்பற்றும் பல்கலைக்கழகங்களுக்குள் ஏற்பட முடியுமான பொது நிலமையாகும். அதற்கமைய அச்சிடப்பட்ட புத்தகங்களை பாவினையிலிருந்து அகற்றுவதானது தொகைச் சேதமாக குறிப்பிட முடியாது. அதற்கமைய நிர்வாகக்குழுவின் அனுமதியின் பேரில் அக்கற்கைநெறி புத்தகங்களை உரிய வருடத்தின் செலவாக கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
	(ii)	நிதிப்பிராமணங்கள் 113 (3) (ஆ)	பல்கலைக்கழகத்தின் ஏதேனும் கற்கைநெறிக்கு பதிவைப் பெற்றக் கொண்ட சகல மாணவர்களினதும் தரவுகளை பல்கலைக்கழக கணனியில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. யாராவது மாணவர் கற்கைநெறியை விட்டுப்போகல்/ விலகுதல்/ முடித்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் மாணவர்களது தகவல்கள் கணனியிலிருந்து அழிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கமைய 05 வருடங்களுக்கு அதிகமாகின்ற பதிவை புதுப்பிக்காத மாணவர்களின் தரவுகள் கணனியிலிருந்து நீக்கப்படுவதில்லை.
(ஆ)	(iii)	1971 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தின் 11 (அ) உறுப்புரை	திறைசேரி அனுமதியைப் பெறும் வரை குறுங்கால முதலீடுகளை தாமதிக்க முடியாததனால் திறைசேரி உத்தியோகத்தர்களின் ஆலோசனையின் பேரில் நிலையான வைப்புக்களின் முதலிடும் சந்தர்ப்பத்தில் திறைசேறி விண்ணப்ப ஆவணங்கள் திறைசேறிக்கு அனுப்பப்பட்டுள்ளது.
(இ)		2022 ஏப்ரல் 26 ஆம் திகதியுடைய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை மற்றும் 2023 ஜனவரி 18 ஆம் திகதியுடைய இல BD/HRD/126/214/19/2023 இலக்கமுடைய திறைசேறி செயலாளரின் கடிதம்	(i) திறைசேறியின் செயலாளார் மூலம் அரச, கூட்டுத்தாபன மற்றும் வரையறுக்கப்பட சபைகள் என்பவற்றின் பிரதானிகள் உட்பட சகல அரச நிறுவனங்களையும் அழைத்து வெளியிட்டுள்ள தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இல 03/20222, 2022 ஏப்ரல் 26 ஆம் திகதியுடைய சுற்றறிக்கைக்கு ஏற்ப பல்கலைக்கழகத்தின் மூலம் சகல அனுமதிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. அதன் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோவை இல UGC/DA-F Bond violation 2022 நவம்பர் 09 ஆம் திகதியுடைய கடிதம் மூலம் கீழ்வரும் விடயங்களுக்கு இடமளிக்கப்பட்டது. • நரந்தர ஊழியப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தற்காக தற்காலிக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல், அவ்வாறான வேலைவாய்ப்புகளை நிரப்புவதற்கு தேவையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல். • கல்விசார் விடுமுறைகளுக்காக தற்காலிக விரிவுரையாளர்களை நிரந்தரமாக்குவதற்கு முன்னர் தேவையான பட்டப்படிப்பை நிவர்த்தி செய்வதற்காக வெளிநாட்டுக்கு செல்லல் • பருவகால விடுமுறையில் வெளிநாட்டில் கற்பதற்கு செல்ல விரும்புபவர்கள் தகைமையை பூர்த்தி செய்தல் (ii) உடன்படவில்லை

			இந்த நிதியங்கள் ஒருங்கிணைந்த நிதியத்திலிருந்து பெறாத ஒதுக்கங்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.. பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளுக்காக CERC மற்றும் C-SAP ஆகிய நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறுங்கால கற்கைநெறிகள் மற்றும் பட்டப்பின் கற்கைநெறிகள் மூலம் பெறப்பட்ட மிகுதியின் ஒரு பகுதி உரிய பிரிவுகளுடன நிதியத்திற்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளன. அந்த நிதியங்களின் உரிமை அவ் அவ் பிரிவுகளை சார்ந்ததாகும். எவ்வாறாயினும் பொது விடயங்களுக்காக செலவளிக்கும் போது செயற்குழுவின் பரிந்துரையுடன் நிர்வாகக்குழுவின் அனுமதியைப் பெறவும் வேண்டும்.
(ஈ)		பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் V ஆம் பந்தியின் 7.6 உறுப்புரை	(i) ஜீ. சமரனாயக,(ii) எஸ்.தலுவத்த (iii) வி.ஜி.எஸ் ஏகநாயக (iv) ஜே.ஏ.எஸ்.டீ. சேதுங்க (v)எச்.கே.டீ.ஏ.டி.என்.அன்னக்ககே (vi) டப்லியூ.எஸ்.டி பொன்சேகா (vii) எம்.கே.எம்.பீ.சீ ராஜபக்ச பிணைமுறிகளை முறித்து பத்து வருடங்களுக்கு அதிகமான மேற்கூறப்பட்ட பெயருள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2021.10.07 ஆம் திகதி இடம்பெற்ற விடுமுறை செயற்குழுவின் போது கீழ்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அதன்படி நடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது உரிய உத்தியோகத்தர்களின் ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ள தொகை, அவர்களுடைய விருப்பை தெரிவிக்கும் கடிதம் இல்லாமல் வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அமைச்சரவை அனுமதியை பெற்றுக் கொள்வதற்கான கடிதம் உபவேந்தரின் கையொப்பத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்கள் மற்றம் அவர்களது பிணைதாரர்களின் தற்கால முகவரியைத் தேடல். புல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அறிவூட்டப்பட்டுள்ளதுக்கு அமைவாக, காலவதியான பிணைமுறிகளை மீறியமை தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அறவிடும் செயற்பாடுகள் அத்தீர்மானங்களுக்கு ஏற்ப மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. (viii) யூ.ஜீ ஜயசேயகர பிணைமுறிப்பணத்தை அறவிட நட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய மாவட்ட நீதிமன்றம் (கல்கிஸ்ஸ) 2014.04.30 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (Case No. 7362/14/M). 2019.12.19 ஆம் திகத பல்கலைக்கழகத்திற்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவ்வழக்கிற்கு எதிராக ஜயசேகர அவர்களால் WP/HCCA/MT/30/30/2020 F-A மற்றும் WP/HCCA/MT/30/2020 F-B ஆகிய இலக்கங்களின் கீழ் சிவில் மேன்முறையீட்டு உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் 2022.09.27 ஆம் மேன்முறையீட்டில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மூலம் பதில் முறைப்பாட்டாளரான திறந்த பல்கலைக்கழகத்திற்கு இணக்கப்பாடொன்றை முன்மொழிந்துள்ளது. அவ் இணக்கப்பாட்டை கருத்தில் கொண்ட பல்கலைக்கழக பேரவை 2022.1028 ஆம் திகதி இடம் பெற்ற 492 ஆவது கூட்டத்தில் மீள்இணக்கப்பாடொன்றை தெரிவித்ததுடன், இது தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டவர் பதில் ஏதும் சொல்லாததனால், 2023.05.08 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக மதிப்புக்குரிய கல்கிஸ்ஸை நீதிமன்ற தீர்ப்பு 2023.06.15 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. (ix) பீ.டி. ஆர் தாபரே

			உடன்படிக்கையின் பெறுமதியின் ஒரு தொகுதி ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு தேவையான ஊழியர் சேமலாப நிதியத்தின் பத்திரம் 2021.08.28 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள பணம் அவரிடமிருந்தும் பிணைதாரர்களிடமிருந்தும் அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. (ஒ) எச்.ஏ.சீ.எம் பெரேரா உடன்படிக்கையின் பெறுமதியின் ஒரு தொகுதி ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு தேவையான ஊழியர் சேமலாப நிதியத்தின் பத்திரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஓய்வுதிய நன்கொடை பணத்தையும் அவரின் விருப்பின் பேரில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல காரணங்களைக் குறிப்பிட்டு, பிணைமுறிப் பெறுமதியை மீள கணக்கிடுமாறு பெரேரா அவர்கள் முறையீடு செய்துள்ளார்கள். அவ்வாறு மீள கணக்கிடப்பட்ட பெறுமதி குறிப்பிடப்பட்டதன் பின்னர் திருத்தப்பட்ட பிணைமுறி பெறுமதியை செலுத்தவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (xi) கே.சீ அஹங்கம உடன்படிக்கையின் பெறுமதி ரூபா.634,094.65 ஆகும். சேமலாபத்தின் தொகை ரூபா.707,731.11 ஆகும். உடன்படிக்கையின் பெறுமதி மேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கான சேமலாப நிதிய விடுகைப் பத்திரம் 2023.03.23 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.
(உ)		1978 டிசம்பர் 19 ஆம் திகதியுடைய 842 ஆம் இலக்க திறைசேறி சுற்றறிக்கை	பல்கலைக்கழகத்தின் நிலையான வைப்புக்களுக்கு வருடாந்தம் சேருகின்ற அளவு மற்றும் அவற்றின் பெறுமதி தொடர்பான விபரங்கள் நிதி வெளிப்பாடுகளின் குறிப்புகளுடன் ஒவ்வொரு வருடமும் கணக்காய்வுகளுக்காக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
(ஊ)		கொள்முதல் வழிகாட்டல்கள் சுற்றறிக்கையின் 5.4.11 உறுப்புரை	ரூபா. 10,088,143.00 நிறுத்தி வைத்திருக்கும் வரிப்பணத்திக்கு ஏற்ப, உரிய வழங்குனர்கள் மூலம் வரிப்பண தீர்வுச் சான்றிதழ் இதுவரையில் எங்களுக்கு அனுப்பப்படவில்லை. அதனால் அப்பணத்திற்கு உரிய சான்றிதழ் முன்வைக்கப்படும் வரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளத. வரிப்பண விறியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பணவுகள் தொடர்பான விபரங்கள் சகல செயற்பாடுகளினதும் முடிவில் உரிய தினத்தில் தேசிய வருமான ஆணைக்குழுவின் நாயகம் அவர்களுக்கு அனுப்பப்படல் வேண்டும். இதன் பிரதியொன்று கணக்காய்வாளருக்கு முன்வைக்கபடாததினாலும், எதிர்காலத்தில் தயாரிக்கப்படுகின்ற உரிய அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளருக்கு அனுப்பப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
(எ)		2021 நவம்பர் 16 ஆம் திகதியுடைய மற்றும் Operational Manual (01/2021) ஆம் இலக்க அரச செயற்திட்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் உறுப்புரை	2022 ஆம் ஆண்டிற்குரிய நிருவாகப் பிரிவின் செயற்பாடுகளை செயற்படுத்தும் திட்டத்தை உள்ளடக்கும் செயற்பாடு இடம்பெறவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஏவ்வாறாயினும் பின்னர் 2022 ஆம் ஆண்டிற்கான நிருவாக பிரிவுகளின் செயற்பாடுகள் பல்கலைக்கழக இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்திய விதம் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டு முதல் எதிர்காலத்தில் முறையான நிருவாகப் பிரிவொன்றிற்காக உரிய செற்பாட்டு

			செயற்திட்டத்தை மேம்படுத்தி பல்கலைக்கழக செயற்பாட்டுத் திட்டத்தை உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் 2021 ஆம் ஆண்டும முடிவின் போது தயார் செய்து 486 ஆம் பேரவைக்கு 22.04.2022 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பாடு செய்யப்பட்டு 486 ஆவது பேரவைக் கூட்டத்திற்கு 22.04.2022 முன்வைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது செயற்பாடுகளாக திட்ட முன்னேற்றறிக்கை கண்காணிப்புகள் இரண்டு தடவைகள் கீழுள்ளவாறு பேரவைகடகு முன்வைக்கப்பட்டது. • 2022.10.25 ஆம் திகதி இடம்பெற்ற 492 வேது பேரவைக் கூட்டத்தில் முதலாவது செயற்பாட்டு முன்னேற்றறிக்கை (2022 ஜனவரி – ஜூன் வரை) சமர்ப்பிக்கப்பட்டது. • 2023.04.28 ஆம் திகதி இடம்பெற்ற 498 ஆம் பேரவைக் கூட்டத்தின் போது இரண்டாவது செயற்பாட்டு முன்னேற்றறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு முன்னேற்றிக்கை 2022 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டு 27.01.2023 ம் திகதி இட்மபெற்ற 495 ஆவது பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

2.3 ஏனைய விடயங்கள்

(அ)2018 ஆம் ஆண்டு முதல் புதிய கணனி முறைமையொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரையில் கணனி முறைமையை அமைப்பதற்கு தேவையான தரவுகள் சேகரிக்கும் செயற்பாடு மட்டும் இடம்பெற்றிருந்த போதிலும், கணனி முறைமை என்றவாறு கணக்குகளில் பதிவதற்கான கணனி முறைமையொன்று நிறுவப்படவில்லை. அதற்கமைய அச்செலவுகளை மூலதனமயப்படுத்த அவசியமான நிபந்தனைகள் நிறைவேற்றப்படாமையினால் உரிய செலவுகள் மீண்டுவரும் செலவுகளாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளன. எது எவ்வாறாயினும் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மூலதன செலவுகளாக கணக்குகளில் பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) பல்கலைக்கழக மருத்துவ நலன்புரி திட்டத்தின் நிதிக்குழு மற்றும் பேரவையின் அனுமதியின் பேரில் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான திறைசேறி அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக 2023.07.10 ஆம் திகதி உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பேரவையின் அனுமதியுடன் உபவேந்தரினால் நியமிக்கப்பட்ட 06 பேர்கள் கொண்ட (மருத்துவ அதிகாரி, பதிவாளர், நிதியாளர், தாதியியல் பிரிவு, மருத்தியல் பிரிவு, மருத்துவ பிரயோக விஞ்ஞானப் பிரிவின் பிரமுகர்கள்) பற்றுச்சீட்டுகளை பரிசீலித்து, பல்கலைக்கழக மருத்துவ அதிகாரியின் மூலம் சகல மருத்துவ அறிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

(இ) இரத்தினபுரி பிராந்திய மத்திய நிலையத்தின் கூரையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் இலங்கை இராணுவப்படையின் ஊழியப் பங்களிப்புடன் மேற்கொள்ள திட்டமிட்டு அதற்கு தேவையான பொருட்கள் 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டன. எனினும் இராணுவத்தினால் எடுக்கப்பட்ட அவசர தீர்மானம் ஒன்றின் காரணமாக அச்செயற்பாடுகளின் தொடக்க நடவடிக்கைகள் காலதாமதமாத்தப்பட்டன. எனினும் மீண்டும் இராணுவ ஊழியப் பங்களிப்பை அளிப்பதற்கு இலங்கை இராணுவத்தி அனுமதி கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட்டதால் மீள 2023 ஜூன் மாதத்தின் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டு இப்போது முடியும் தருவாயில் உள்ளது.

(ஈ) அமைச்சரவையின் அனுமதியைப் பெற்ற காணித் துண்டுகள் 17 களுள் 11 காணித் துண்டுகள் (மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், பதுளை, திருகோணமலை, பண்டாரவளை, அம்பாறை, மாத்தளை, பொலன்னறுவை, கம்பஹா, புத்தளம்) ஆகிய காணிகளின் உரிமத்தை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு தேவையான உரிய பிரதேச செயலாளர்களின் பரிந்துரை அறிக்கையொன்று, உரிய பிரதேசத்தின் காணி ஆணையாளர் மூலம் காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஆணையாளருக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதுடன் அதற்கு தேவையான பின்விபரம் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் யாழ்ப்பாண பிராந்திய நிலையம் உள்ள காணியானது அரச காணிகள் சட்டத்தின் 6(1) உறுப்புரைக்கு அமைவாக பல்கலைக்கழகத்தினால் செலுத்த வேண்டிய பெயர்க் கட்டணம்

ரூபா.40,000.00 பணம் 2023.05.19 ஆம் திகதி பல்கலைக்கழகத்தினால் நல்லூர் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறே பல்கலைக்கழகத்தினால் உரிமம் கொண்டாடப்படும் ஏனைய காணித்துண்டுகளை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் அதற்குரிய பின்விபரம் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.

(உ)

- இப் பல்கலைக்கழகத்தின் நாவல வளாகத்தில் உள்ள விருந்தினர் இல்லத்திற்கு பொறுப்பாக இருந்தவரை கட்டாய விடுமுறையில் அனுப்பியதன் மாற்றுத் தீர்வாக அவ் விருந்தினர் இல்லத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள ஒருவர் இல்லாமல் போனதன் காரணமாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ள அனுமதி கிடைக்கும் வரை தற்காலிக தீர்வாக பேரவையின் அனுமதியுடன் அப்பதவிக்கு உடன்படிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்.

- மருத்துவ நிலையத்தின் அனுமதியளிக்கப்பட்ட ஊழியர்களுன் தாதியர் பதவியில் இருந்த ஊழியர் 2022.12.31 ஆம் திகதி ஓய்வைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அதற்கு முன்னராக ஓய்வூதிய விடுமுறையைப் பெற்றுக் கொள்ளல் ஆகிய காரணங்களால் மருத்துவ நிலையத்தில் வேறு தாதியர் இல்லாத காரணத்தினால் அப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

- தகவல் தொழிநுட்ப பிரிவின் தொழிநுட்ப அதிகாரிகள் ஒருவருக்கு சம்பளமில்லாத வெளிநாட்டு விடுமுறை கிடைக்கப்பெற்றதனால் அவ் ஊழியருக்காக வேறாக்கிய பணத்தினால் சம்பளம் செலுத்தும் அடிப்படையில் அவ் அரசகருமங்களை பதில் கடமை புரிவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார். அவ் சம்பளமில்லாமல் விடுமுறை பெற்றுக் கொண்ட ஊழியர் விடுமுறையின் பின்னர் மீள வராமையினால் அவர் தொழிலை விட்டுச் சென்றவர் என்ற அடிப்படையில் அச்செயற்பாடுகள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- தற்போது பல்கலைக்ழகத்தில் சாரதி வேலைவாய்ப்புக்கள் 08 நிரப்பப்படாமல் காணப்படுவதுடன் பல்கலைக்கழக பீடங்களினதும் ஏனைய பிரிவுகளினதும் நாளாந்த தேவைப்பாடுகளுக்காக வாகன வசதிகளை அளிப்பது சிரமமாக இருந்ததினால் ஒப்பந்த அடிப்படையில் 05 பேர்களை ஆட்சேர்ப்பு செய்ய பேரவை அனுமதியளித்தது. அதற்கமைய சாரதி வேலைவாய்ப்புகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்.

- இப்பல்கலைக்கழகத்தில் தற்காலிக வதிவிட வசதிகள் பிரிவிற்காக பிரிதி விடுதிப் பாலகர் இரண்டிற்கு அனுமதியளிக்கப்பட்டது. எனினும் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள் இரண்டிற்கும் ஒவ்வொருவர் மாத்திரம் சேவைக்கமர்த்தும்போதுபல்வேறு சிக்கல்கள் மற்றும பிரச்சினைகள் ஏற்படுவதனால் ஆண்கள் விடுதிக்கு இருவரும், பெண்கள் விடுதிக்கு இருவர் என்றவாறும் ஆட்சேர்ப்பு செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.

- பராமரிப்புப் பிரிவின் நிர்மானப் பணிகள் மற்றும் புனர்நிர்மானப் பணிகளுக்காக பற்றுச்சீட்டுக்கள் தயாரித்தல் மற்றும் அதற்குரிய ஏனைய செயற்பாடுகள் தாமதமின்றி மேற்கொள்வதற்காக பொறியியலாளர்கள் இருவரைத் தவிர்த்து அது தொடர்பான போதிய அறிவுள்ளவர்கள் இல்லாத காரணத்தினால் பேரவையின் அனுமதியுடன் அளவியல் பத்திரங்களை தயாரித்தல், அளக்கும் செயற்பாடுகள் ஆகியவற்றிற்காக கணிய அளவையாளர்கள் இருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

- மருத்துவ நிலையத்திற்கான வைத்திய அதிகாரப் பதவிக்கு நிலையான வைத்தியர் ஒருவர் 1998 ஆம் ஆண்டிலிருந்து இல்லாத காரணத்தினால் அப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். வைத்திய அதிகாரியின் பதவிக்காக வேறாக்கப்பட்ட பணத்திலிருந்து சம்பளம் செலுத்தும் அடிப்படையில் அரசகருமத்தை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

- இப்பல்கலைக்கழகத்தின் புள்ளிவிவரவியலாளர் 2020.12.03 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வூதியம் பெற்றுக் கொண்டதனால் 2022.01.24 ஆம் திகதி நேர்முகப்பரீட்சை வைத்து புள்ளிவிபரவியலாளர் ஒருவரை தேர்வு செய்திருந்த போதிலும் அரசினனால் வெளியிடப்பட்ட தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல 3/2022 இற்கு அமைவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல 04/2022 இற்கு அமைவாக நியமனம் செய்யாத அவ் ஊழியருக்காக வேறாக்கிய பணத்திலிருந்து சம்பளம் செலுத்தி ஒப்பந்த அடிப்படையில் அவர் கடைமையில் அமர்த்தப்பட்டார்.

- இப்பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கீழ்வரும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

1. விரிவுரையாளர் - Lecturer (on Contract) 40

2.	சிரேஷ்ட விரிவுரையாளர் Seior lecturer (on contract)	01
3.	உதவி பணிப்பாள் (NODES)	01
4.	செயற்திட்ட உதவியாளர்	136
5.	கல்விசார் ஒருங்கிணைப்பாளர்கள்	34
6.	செயற்திட்ட மற்றும் தொழிநுட்ப உதவியாளர்கள்	55
7.	மென்பொருள் பொறியியலாளர்	01
8.	உதவி மென்பொருள் பொறியாளர்கள்	03
9.	Business Analyst	02
10.	தகவல் உதவியாளர்	07
11.	குளீரூட்டி தொழிநுட்பவியலாளர்கள்	01

சிரேஷ்ட விரிவுரையாளர்கள் (ஒப்பந்த அடிப்படையில்)

சிரேஷ்ட விரிவுரையாளர்கள் (ஒப்பந்த அடிப்படையில்) பதவிகளுக்காக கீழுள்ள காரணங்களை அடிப்படையாக் கொண்டு பேரவையின் அனுமதியுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

- நிலையான பதவிகளில் காணப்படுகின்ற பற்றாக்குறைகள் காரணமாக கல்விசார் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளல்.
- சில கல்விசார் பிரிவுகளின் கல்விசார் பிரதானிகள் மூலம் காணப்படும் தேவைப்பாட்டுக்கு அமைவாக நியாயமான காரணங்களுடன் மேலதிக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய கோரிக்கை
- பிராந்திய நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட மாணவர்தொகைக்கு அமைவாக
- கல்விசார் பிரிவுகளில் புதிதாக ஆரம்ப்பிப்பதற்கு திட்டமிட்டிருந்த விசேட கற்கைநெறிகளுக்காக
- சம்பளமற்ற விடுமுறையில் இருக்கும் கல்விசார் ஊழியர்களுக்கு பதிலாக கல்விசார் பிரிவுகளின் கல்வி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு

இப்பல்கலைக்கழகத்தின் நகல பீடங்களினதும் கல்விசார் பிரிவுகளினதும் மற்றும் ஏனைய பிரிவுகளினது நிருவாக நடவடிக்கைகள் வழமை போன்று நடாத்திச் செல்வதற்காக மேற்கூறப்பட்ட ஏனைய பதவிகளுக்காக பேரவையின் அனுமதியுடன் பல்கலைக்கழகம் சம்பாதிக்கும் பணத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

- இப்பல்கலைக்கழகத்தில் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

1.	தற்காலிக விரிவுரையாளர்கள்	21
2.	தற்காலிக செயல்முறை பயிற்றாசிரியர்கள்	177
3.	தற்காலிக ஆய்வு உதவியாளர்கள்	04

அனுமதியளிக்கப்பட்ட ஊழியர்கள் நிழவும் வெற்றிடங்களுக்கு வேறாக்கப்பட்ட பணத்தை பயன்படுத்தி கல்விசார் பிரிவுகளின் கல்வி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காக தற்காலிக விரிவுரையாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தற்காலிக செயல்முறை பயிற்றாசிரியர் பதவிகளுக்காக மற்றும் தற்காலிக ஆய்வு உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது முகாமைத்து சேவைகள் திணைக்களத்தின் அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கைகளுக்கு அமைவாக ஆகும்.

இப்படிக்கு நம்பிக்கையுள்ள,

பேராசிரியர் பீ.எம்.சீ. திலகரத்ன

உபவேந்தர்